விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 28 புதன்கிழமை (10.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 053

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1366)

## கொரோனா 5 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் 19

## வவுனியாவில் 7 வயது சிறுவன்
## கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



(வவுனியா)
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவ்வி பகுதியில் 7 வயது சிறுவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட் 19

## யாழ்.ஆய்வுகூடங்களில் பரிசோதனை
## வடக்கில் 6 பேர் உள்ளிட்ட 14 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆறு பேர் உள்ளிட்ட 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் 19

## தமிழரின் அகிம்சைப் போராட்டத்தை
# கொழும்பு ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை!
## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா



(கொழும்பு)
பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழர்களின் அகிம்சை போராட்டங்கள் குறித்து கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடகங்கள் கவனம் செலுத்தாதது ஆச்சரிய மளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## 16 வயது மாணவி வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா கற்குழி பகுதியில் 16 வயது மாணவியின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
நேற்றையதினம் வீட்டில் யாருமற்ற 19

## கரவெட்டியில் கஞ்சாவுடன் 4 இளைஞர்கள் கைது

(கரணவாய்)
கரணவாய் மத்தி கரவெட்டி பகுதியில் நேற்று மதியம் கஞ்சா பாவித்துக் கொண்டிருந்த 4 இளைஞர்களை நெல்லியடி பொலிஸார் கைது செய் 19

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு
### முள்ளியவளையில் சம்பவம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - முள்ளியவளை - ஒட்டுசுட்டான் வீதியில் கூழாமுறிப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 19

## இளைஞர்களை தடுப்பில் வைத்திருக்கவா அச்சுறுத்தல் என அரசு கூறியது?
### சபையில் சுமந்திரன் எம்.பி கேள்வி

(கொழும்பு)
பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, அரசாங்கமே விசேட அதிரடிப் படையினரின் பாது காப்பினை வழங்கியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அவர், பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக 19

## 975 பேருக்கு கொரோனாத் தொற்று
## ஒரே நாளில் அடையாளம் காணப்பட்ட அதிக எண்ணிக்கை

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 975 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
நாட்டில் ஒரே நாளில் அடையாளம் காணப்பட்ட கோவிட் - 19 நோயாளரின் அதிகபட்ச எண்ணிக்கை இதுவாகும்.
நாட்டில் ஜனவரி 19

## மக்கள் எழுச்சிப் பேரணி; வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டவர்கள், அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிமன்றில் 3 பொலிஸ நிலையங்களாலும் தாக்கல் செய்த வழக்கு 19

## இலங்கை விவகாரம் ஐ.நாவில் கனடா தலைமை ஏற்க வேண்டும்

(கொழும்பு)
இலங்கை 19

## வடமராட்சிப் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதல்
### மூவர் படுகாயம்

(கரணவாய்)
வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம் 19

## இலங்கை விவகாரம்; ஐ.நா பக்கச்சார்பு
### அரசு பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)
இலங்கை விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையும் அதன் ஆணையாளரும் பக்கச்சார்பாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இது ஐ.நாவின் 19

**வேலை ஆட்கள் தேவை**

555, நாவலர் வீதியில் அமைந்துள்ள
ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்க்கு
கணினி பயிற்சி ஆட்கள் தேவை.
CorelDraw, Photoshop தெரிந்த ஆண். பெண்.
அனுபவம் உள்ளவர்கள் மட்டும்.
(C-1395)

**தொடர்பு : 077 791 7680**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# நெல்லியடியில் ஒருவர் கைது

(கரணவாய்)

நீர் இறைக்கும் இயந்திரத்தை (மோட்டர்) திருடி விற்க முனைந்த ஒருவரை நெல்லியடி பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் தென்மராட்சி மீசாலை உசன் பகுதியைச் சேர்ந்தவர் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

(ம-03,60)


**A/L 2021, 2022**
**பௌதிகவியல்**
**N.BABU**
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
**மொடேண்**
மற்ஸ் அக்கடமி - சண்டிலிப்பாய்
(5589)
**077 936 5087**


## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**அன்ரன் கிறிஸ்ரபெல்**
**அனோஜா**
[ Teacher ( S.L.T.S- I ) ]



பிறப்பு 25.06.1965 இறப்பு 09.02.2021

எம் பாடசாலையில் ஆசிரியராய் கால்பதித்து
இரண்டு வருடங்கள் மட்டுமே ஆயினும்
ஆறவில்லை எம் துயரம்!
மாணாக்கர் சிந்தையில் கல்வி ஒளியைப்புகட்டும்
ஞானச் சுடராய் இருந்தது மட்டுமன்றி
நல் ஒழுக்கத்தையும் எந்நாளும் விதைத்து
வேறு இன்னோரன்ன துறைகளில் – நாம்
சாதிக்கத் துணைநின்ற உம்மை
இன்று இழந்து தவிக்கிறோம்
உங்கள் புன் "நகை" எனும்
ஆபரணத்திற்கு விலைமதிப்பில்லை.
காலையில் உம் புன்னகையில் விழித்துச் சென்றால்
எம் அன்றைய பொழுதே பூரிப்பாய் கழியும்.
இன்று கர்த்தருள்நீங்கள் உறைந்தாலும்
எம் மனங்களில் என்றும் நிறைந்திருப்பீர்.

உங்கள் ஆத்மா கர்த்தருள்
அமைதியாய் துயில் கொள்ள
பிரார்த்திக்கின்றோம்.

(C-1396)

ஆசிரியர் கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை




KIDS' WORLD

**International Preschool**
ENROL YOUR KIDS NOW
Commencing on
15th of Feb. 2021
**3+ Foundation Stage**
**4+ Reception Year**
(C-1393)

**Contact us : 077 968 9119, 077 351 5558**
**Uppumadam Junction, Kondavil.**


## மரண அறிவித்தல்

பிறப்பு 25 – 06 – 1965



இறப்பு 09 – 02 – 2021

**திருமதி கிறிஸ்ரபெல் அனோஜா அன்ரன்**

(ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் கல்லூரி, முன்னாள் ஆசிரியை - யா/ திருக்குடும்ப கன்னியர் மடம், யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரபெல் அனோஜா அன்ரன் நேற்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ் - லூர்ட்ஸ்மேரி புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் - பிலோமினா நவறஞ்சிதம் தம்பதியரின் அன்பு மருமகளும் எப். எக்ஸ் அன்ரனின் (கோட்டக் கல்விப் பணிப்பாளர் - நல்லூர்) அன்பு மனைவியும் நிக்கலின் (இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்), மாறியோ (ஆர்பிக்கோ இன்சூரன்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லொயிட் (கனடா), கொஸ்கா (கனடா), அருட்பணி நெவில் ஞானராஜ் (அவுஸ்திரேலியா), யூடிற் (கனடா), மெல்வின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்பணி மரியஹெலன் ஞானேந்திரனின் உடன்பிறவாச் சகோதரியும் எமா, டொறின், பிரதீபா, றஞ்சினி, குபேரன், றஞ்சன், கமலா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற அருட்சகோதரி போலின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை (11.02.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) ஒப்புக் கொடுக்கப்பட்டு அங்கிருந்து மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய சேமக்காலைக்கு திருவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1398)

37/7, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
077 691 3468

தகவல்:-
எப்.எக்ஸ் அன்ரன் (கணவர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 10 . 1948



உதிர்வு 10 . 02 . 2020

அமரர்
**இரத்தினம் தர்மலிங்கம்**
**( மன்னவர் )**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

தலையாட்டி, கரணவாய்,
கரவெட்டி.
(C-1394)

தகவல் :
குடும்பத்தினர்

# எந்த குற்றச்சாட்டு எம்மீது முன்வைத்தாலும்

# அரசாங்கம் பதில் சொல்லும், இராணுவத்தை காப்பாற்றும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்த பின்னர் விடுதலைப் புலிகளை அழித்ததை விரும்பாதவர்களும் இந்நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் அமைதியாக வாழ்வதை விரும்பாதவர்களும் ஜெனிவாவில் கோஷம் எழுப்பி இலங்கையை தண்டிக்க முயற்சித்துக்கொண்டுள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

முன்னைய ஆட்சியில் அப்போதைய வெளிவிவகாரத் துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையை காட்டிக் கொடுத்து, அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்ததன் விளைவாகவே எம்மால் எந்த வொரு சுயாதீன தீர்மானமும் எடுக்க முடியாது போனது.

எனினும் நாம் நேற்று அனைத்தையும் நிராகரிப்பதாக வெளிப்படையாக தெரிவித்துள்ளோம். அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையில் இருந்து நாம் வெளியேறிவிட்டோம். எனினும் எமது இராணுவம் மீதும், எமது ஆட்சி மீதும் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வேறு வழியில் எமது இராச்சியத்தை பலவீனப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் எம்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுகளுக்கும் அரசாங்கம் பதில் தெரிவிக்கும். அதேபோல் எமது இராணுவத்தை காப்பாற்றும் சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் என அவர்மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் உறுதிப்படுத்தியது பிரிட்டன்

(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள 46 ஆவது மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றை சமர்ப்பிக்கப்படுமென்பதை பிரிட்டன் உறுதி செய்துள்ளது.

ஜெனிவாவிற்கான பிரிட்டன் தூதுவரும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமாகிய ஜூலியன் பிரத்வைட் மனித உரிமை பேரவைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இதனை அறிவித்துள்ளார் .

22 ஆம் திகதி முதல் இடம் பெறவுள்ள மனித உரிமை பேரவையின் அமர்வு குறித்த திட்டங்களை உறுதி செய்வதற்காக மனித உரிமை பேரவையின் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றவேளை பிரிட்டன் தனது தீர்மானத்தை சமர்ப்பிக்கவுள்ளமை உறுதியாகியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் என பிரத்வைட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்தின் தொடர்ச்சியான தீர்மானமாக இது காணப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் கடுமையான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக புதிய தீர்மானம் காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.(நி-4)

# அத்தியாவசிய பொருட்களின் வர்த்தமானி ரத்து

## உறுதி செய்தார் பந்துல குணவர்த்தன




(கொழும்பு)

சீனி, ரின் மீன், பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு ஆகியவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச விலை இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி - சீனி, தகரப் பேணியில் அடைக்கப்பட்ட மீன், பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு என்பவற்றிற்கான உச்ச வரம்பு விலை அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (5-4)

# சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பை நானே நீக்கினேன்-சரத் வீரசேகர இறுமாப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பை தாமே நீக்கியதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான தமிழ் பேசும் சமூகத்தின் நீதிக்கான பேரணி பல்வேறு தடைகளைத் தாண்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிகண்டியில் வெற்றியுடன் நிறைவடைந்தது. இந்தப் பேரணியின் ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் த.கலையரசன் ஆகியோர் முன்னின்று செயற்பட்டனர். இவர்களில் சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென மீளப்பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்பை தாமே நீக்கினார் எனவும் எதற்காக நீக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

"தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களால் சுமந்திரனுக்கு கொலை அச்சுறுத்தல் இருக்கின்றது என்றபடியால் அவருக்கு சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. உண்மையில் சுமந்திரனுக்கு அவ்வாறான அச்சுறுத்தல் இருக்குமானால் அவரால் இவ்வாறான பேரணியில் கலந்துகொண்டிருக்க முடியாது. எனவே, அவருக்கு சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்பு எதற்கு?" என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பினார்.

2014 ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைப் படுகொலை செய்ய மூன்று தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் 30 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் தற்போதும் 6 இற்கும் அதிகமான வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் சந்தேகநபர்கள் பலர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இலங்கைப் பாராளுமன்றில் பாக்.பிரதமர் உரையாற்றுவார்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான், இலங்கை பாரா ளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக வருகை தரவுள்ளார்.

இதன்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

கொவிட்-19 தொற்றுநோய் 2019 இல் தொடங்கிய பின்னர் இலங்கைக்கு வருகை தரும் முதல் அரசாங்கத் தலைவராக பிரதமர் இம்ரான் கான் இருப்பார்.

இலங்கை பல ஆண்டுகளாக பாகிஸ்தானுடன் நெருங்கிய உறவைப் பேணி வருகிறது. 2015 இல், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ‘செல்லமே’ லீச் ‘தங்கமே’ அண்டர்சன்

## சென்னையில் இங்கிலாந்து வெற்றிக்கொடி

## இந்தியாவுக்கு விழுந்தது மரண அடி



அண்டர்சன், லீச் போட்டுத்தாக்க சென்னை டெஸ்டில் இங்கிலாந்து அணி 227 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்றது.

அணித் தலைவர் ஹோலி, சுப்மன் கில் அரைச்சதம் அடித்து இந்திய ரசிகர்களுக்கு ஆறுதலளித்தனர்.

இந்தியா வ ந் து ள் ள இங்கிலாந்து அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற் கிறது.

முதல் டெஸ்ட் சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 578, இந்தியா 337 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 178 ஓட்டங்கள் எடுத்தது.

பின், 420 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 39 ஓட்டங்களை எடுத்து, 381 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. சுப்மன் கில் (15), புஜாரா (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சுப்மன் ஆறுதல்**

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. முதல் 25 நிமிடங்கள் எல்லாம் நன் றாகச் சென் றது. இதன் பின் திடீரென சரிவு ஏற்பட் டது. லீச் சுழ லி ல் புஜாரா, 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். டெஸ்ட் அரங்கில் 3ஆவது அரைசதம் எட்டினார் சுப்மன்.

இந்நிலையில் அண்டர்சனை அழைத்தார் ஜோ ரூட். இவரது ‘வேகத்தில்’ சுப்மன் (50), போல்டானார். ரகானே (0), ரிஷாப் பன்ட்டையும் (11), அண்டர்சன் வெளியேற்றினார். அடுத்து வந்த வோஷிங்டன் சுந்தரும், பெஸ் சுழலில் ‘டக்’ ஆட்டமிழக்க, இந்திய அணி தோல்வி உறுதியானது.

**6**

ஆசிய மண்ணில் இங்கிலாந்து அணி 2018 முதல் 2021 வரை என கடைசியாக பங்கேற்ற 6 டெஸ்டிலும் வெற்றியை பதிவு செய்தது. இந்த வரிசையில் அவுஸ்திரேலிய அணி 2002-04ல் தொடர்ந்து 7 வெற்றியுடன் முதலிடத் தில் உள்ளது.

• கடைசியாக தென்னாபிரிக்காவில் 3, இலங்கையில் 2, இந்தியாவில் 1 என அந்நிய மண்ணில் இங்கிலாந்து அணி தொடர்ந்து 6ஆவது வெற்றியைப் பெற்றது.

**ஹோலி அரைச்சதம்**

பெஸ் வீசிய போட்டியின் 38 வது ஓவரில் ‘ஹட்ரிக்’ அரைசதம் விளாசிய ஹோலி, டெஸ்ட் அரங்கில் 24வது அரைச்சதம் அடித்தார்.

சற்று நேரம் தாக்குப் பிடித்த அஷ்வின், 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில், லீச் ‘சுழலில்’ ஆட்டமிழந்தார். அடுத்த சிறிது நேரத்தில் ஹோலி (72), ஸ்ரோக்ஸ் பந்தில் போல்டானார். ஷாபாஸ் நதீம் ‘டக்’ அவுட்டானார். கடைசியில் பும்ரா (4) அவுட்டாக, இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 192 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 227 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இங்கிலாந்து அணி, டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இதே மைதானத்தில் வரும் பெப் 13இல் ஆரம்பமாகிறது.

**‘லக்கி’ இஷாந்த்**

ஆர்ச்சர் வீசிய பந்தை (56.5 ஆவது) எதிர்கொண்ட இஷாந்த் சர்மா, சற்று பின்னோக்கி சென்று பந்தை தடுத்தார். அருகில் இருந்த ஒரு ‘ஸ்ரம்ப்’ மட்டும் லேசாக அசைந்து ‘பெய்ல்ஸ்’ கீழே விழ, ‘ஹிட்’ விக்கெட் முறையில் அவுட்டானாரா என சந்தேகம் ஏற்பட் டது. ‘ரீப்ளேயில்’ பந்து வருவதற்கு முன்பே, காற்றின் வேகத்தால் ‘ஸ்ரம்ப்’ அசைந்தது தெரிய, தப்பினார் இஷாந்த்.

**22 ஆண்டுகளில்...**

கடந்த 22 ஆண்டில் முதன் முறையாக சென்னை மண்ணில் இந்திய அணி நேற்று தோல்வியடைந்தது. கடைசியாக 1999ல் சேப பாக்கம் மைதானத்தில் பாகிஸ்தானிடம் 12 ஓட்டங் களால் தோல்வியடைந்தது.

**1**

கடந்த 2013க்கு பின் சொந்த மண்ணில் இந்தியா பங்கேற்ற 35 டெஸ்டில் ஒன்றில் மட்டும் தான் தோற்றது. 28ல் வென்றிருந்தது. 6 ‘சமன்’ ஆகின. நேற்று இரண்டாவது முறையாக தோற்றது.

**3** அண்டர்சன்

சென்னையில் 3 விக்கெட் சாய்த்த இங்கிலாந்து அணியின் அண்டர்சன், 30 வயதுக்குப் பின் அதிக விக்கெட் சாய்த்த பந்துவீச்சாளர்கள் வரிசையில் முதலிடம் பெற்றார். ஒட்டுமொத்தமாக இவர் கைப்பற்றிய 611 விக்கெட்டுகளில், 30 வயதுக்குப் பின் மட்டும் 343 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார்.



ஜக் லீச்


பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை



அதிபர் - திரு.வேலுப்பிள்ளை செல்வகுமார்



ஆசிரியர் - திரு.சிவஞானம் கோகுலதர்சன்





ர.தன்ஷிகா (புள்ளி - 181)



செ.சம்ஷிகா (புள்ளி - 174)



அ.சாருஜன் (புள்ளி - 160)



2019இல் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றி சித்திபெற்ற மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் 2020இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்திபெற்ற மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த வகுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் இவர்கள் அனைவரையும் வழிப்படுத்தி நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-1397)

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம், கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை.

# கொரோனா தொற்று நீர் வழியாக பரவாது

# காற்றால் மட்டுமே பரவும்-இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

**கொரோனா தொற்று நீர் வழியாகப பரவாது என கொரோனா ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார எழுப்பிய கேள்விக்கு பாராளுமன்றில் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அநுராதபுரம் கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் கொரோனா தொற்று உறுதியான நோயாளிகள் பயன்படுத்திய கழிவுநீர் பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பகுதியில் பாய்வதாக ரோஹன பண்டார தெரிவித்தார்.

தண்ணீர் மாசுபடும் என்பதனால் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை இலங்கையில் நிராகரிக்கப்பட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் பாயும் கழிவு நீரினால் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, கொரோனா தொற்று காற்று வழியாக மட்டுமே பரவுவதாகவும் நீர் வழியாக பரவவில்லை என்றும் தெரிவித்தார்.



இருப்பினும் இயற்கை நீருடன் இத்தகைய அசுத்தமான நீர் கலப்பது வேறு நோய்கள் தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்பதனால் இது குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். (நி-4)

# சடலமாக மீட்பு

(ஹற்றன்)

மடுல்சீமை - பிடமாருவையில் அமைந்துள்ள சிறிய உலக முடிவை பார்வையிட சென்று காணாமல் போன நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இவர் உள்ளிட்ட 12 பேர் சிறிய உலக முடிவை பார்வையிடச் சென்றிருந்த போது அங்கு காணப்பட்ட அதிக பனிமூட்டம் காரணமாக பள்ளத்தில் தவறி விழுந்து காணாமல் போயுள்ளார். பின்னர் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் அவரின் சடலம் இரண்டு நாட்களுக்குப பின்னர் நேற்று மதியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த நபர் 34 வயதுடைய கஞத்துறை மக்கொன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# நாட்டில் புகையிலை, மதுபானத்தால் நாளொன்றிற்கு நூறுபேர் வரை உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் புகையிலை மற்றும் மதுபாவனை காரணமாக நாளொன்றில் 110 பேர் உயிரிழப்பதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபை தெரிவித்துள்ளது.

புகையிலை பாவனையினால் மாத்திரம் நாளொன்றுக்கு 60 பேர் உயிரிழப்பதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபையின் தலைவர், பேராசிரியர் சமாடி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி-4)

# ஜெனிவா மனித உரிமை பேரவை விவகாரம் வெளிநாட்டு தூதுவர்களை சந்திக்கும் இலங்கை

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட பாகிஸ்தான் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினோனுக்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் நேற்று முன்தினம் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகருடன் வெளிவிவகார அமைச்சர், ஜெனிவா மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட உள்ளதாக கூறப்படும் யோசனை சம்பந்தமாகவும் தற்போது மேற்கொண்டு வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது சம்பந்தமாக இரண்டு தரப்பினருக்கும் இடையில் சாதகமான பேச்சுவார்த்தை நடந்துள்ளதாக தூதரக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 – 05 – 1950



மறைவு
04 – 02 – 2021

## திருமதி. யோகேஸ்வரி கனகலிங்கம்

*நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், பிராங்பேர்ட் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.யோகேஸ்வரி கனகலிங்கம் (04.02.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, வள்ளியம்மை ஆகியோரின் அன்பு புதல்வியும் மற்றும் கோண்டாவிலை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிராசா, செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும், தம்பிராசா கனகலிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும், துஸ்யந்தி, விபுலா, வேந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகரனின் அன்பு மாமியாரும் மற்றும் கனகேஸ்வரி, தபோகரன், சிவாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உமாகரன், அன்பரசி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மநாதன் (ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்), பிரேமகுமாரி (ஜேர்மனி), செம்மனச் செல்வி (ஆசிரியர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வரதன் (சுவிஸ்), கமலா தேவி(ஜேர்மனி), தனபாலசிங்கம் (கனடா), சந்திராதேவி, இந்திராணி, கணேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மற்றும் காலஞ்சென்றவர்களான தேவபாலன் (ஜேர்மனி), ஞானபாலசிங்கம் மற்றும் சுசிலாதேவி (கனடா), தருமராசா, ரவீந்திரராணி, ரேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலியும் ஆவார்.*

*அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை அவரின் நாயினாதீவு இல்லத்தில் (10.02.2021) இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**நயினாதீவு.** (5682) **தகவல்: குடும்பத்தினர்.**

# குடாநாட்டில் காணப்படும் தீவுகளில் சுகாதார சிக்கல்கள் அதிகமாக காணப்படுகின்றன-சிறீதரன்

(கொழும்பு)

குடா நாட்டில் காணப்படும் தீவுகளில் சுகாதார சிக்கல்கள் அதிகமாக காணப்படுவதாக சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு இதுவரையில் வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை. அவ்வாறு அனுப்புவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, வைத்தியர்களின் தேவை கடல் கடந்த தீவுகளுக்கு அவசியம். அத்தோடு அங்கு பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்றனர். அவர்களுக்கு சம்பளம் குறைவாகவே காணப்படுகிறது.எனவே அவர்களுக்கு ஊக்குவிப்பை வழங்குவதற்காக கொடுப்பனவினை வழங்க முடியுமா? இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# வவுனியாவில் 3 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக முன்மொழிவு

(குருமன்காடு)

ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து 3 பாடசாலைகள் தெரிவுக்காக முன்மொழியப் பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் நாடு முழுவதும் 1000 புதிய தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இருந்து தமிழ்- முஸ்லிம்- சிங்களப் பாடசாலைகள் ஒவ்வொன்று வீதம் 3 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக உள்வாங்கப்படவுள்ளன.

அந்தவகையில் செட்டிகுளம் மகா வித்தியாலயம், அல்-ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம், பரக்கும் மகா வித்தியாலயம் என்பன தேசிய பாடசாலைகளாக உள்வாங்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் ஏற்கனவே இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம், மடுகந்தை தேசிய பாடசாலை, காமினி மகா வித்தியாலயம் என்பன தேசிய பாடசாலைகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-250)

# சங்கானையில் இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஆரம்பித்து வைப்பு



(சாவகச்சேரி)

சங்கானைப் பிரதேச இளைஞர் சம்மேளனம் மற்றும் ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பு ஆகியன இணைந்து கடந்த சனிக்கிழமை இளைஞருக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றினை நடத்தினர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களான லங்கேசன், கிருபாகரன் ஆகியோருடன் இளைஞர் சேவை உத்தியோகத்தர் மதன்ராஜ் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் தசிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் வளவாளர்களாக ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நக்கீரன் மற்றும் காமராஜ் ஆகியோர் செயற்பட்டிருந்தனர். (5-4-30)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஆலய பரிபாலன சபையினருக்கான குறைகேள் அரங்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இந்து சமயப் பேரவையில் அதன் தலைவர் ஈசான சிவசக்தி கிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நகுலேஸ்வரம் ஆதீனகர்த்தா ராஜ ராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், நல்லூர் சிவகுரு ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ வேலன் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர். இதில் சிறப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆற்றுவார். (5-4)



**தீவகம் தெற்கு பிரதேச சபையின் வேலணை உப பிரதேச அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதியினருடனான கலந்துரையாடல் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.**

## மோட்டர் திருடர்கள்; பொதுமக்கள் ஜாக்கிரதை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய், ஊரழு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பிரதேசங்களில் மோட்டர் திருடர்கள் தொல்லை அதிகரித்து வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இது போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் கடந்த ஞாயிறுக்கிழமை இரவு ஊரெழு கரந்தன் பகுதியில் வீட்டு வளவினுள் காணப்பட்ட மோட்டரை திருடி விட்டு அங்கு காணப்பட்ட வாழை மரங்களையும் சேதப்படுத்தி விட்டு திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

எனவே இனிவரும் நாட்களில் இவ்வாறான பிரச்சினை நடைபெறாது தடுப்பதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4)

## திருட்டுக் கும்பலால் வளர்ப்பு பிராணிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு வேளாதோப்பு வீதி வீடொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத திருட்டுக் கும்பலால் பெறுமதி மிக்க வளர்ப்பு பிராணிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு வேளாதோப்பு வீதியிலுள்ள வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத கும்பலால் ஆடு, கோழிகள், முயல் போன்ற வளர்ப்பு பிராணிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)




## வேத சிவாகம வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வேலைக்கைப் பிள்ளையார் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருக்கும் விசேட மண்டபத்தில் அந்தணச் சிவாச்சாரியர்களுக்கான வேதசிவாகம குருகுலக் கல்லூரியில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முதல் இரவு 7 தொடக்கம் 8 மணிவரை ஒவ்வொரு நாளும் சிவாகமப் பிரயோக வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

அத்துடன் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3 தொடக்கம் 4 மணிவரை சமஸ்கிருத பாஷஞான வகுப்புக்களும் 4 தொடக்கம் 5 மணிவரை சமய வகுப்புக்களும் நடைபெறவுள்ளன.

இவ் வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் 077 400 6797 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## யுவதிகளுக்கான இலவச கராத்தே பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் முற்று முழுதாக மகளிர் பங்குகொள்ளும் 3 மாதகால தற்காப்புக் கலை (கராத்தே) இலவசப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியானது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் இரு நிலையங்களில் இடம்பெறும். வடமாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து யுவதிகளும் கலந்து கொள்ள முடியும். பயிற்சிநெறிக்கான இலவச சீருடை மற்றும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்திலிருந்து (edumin.np.gov.lk) இலவசமாக தரவிறக்கம் செய்யவோ அன்றி நிகழ் நிலையில் (Online) படிவத்தை பூர்த்தி செய்யவோ அல்லது நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி பெப்ரவரி 25 ஆம் திகதியாகும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மகளிர் தற்காப்புக்கலை பயிற்சி நெறி-2021" எனக்குறிப்பிட்டு செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2203, 077 736 0783 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (5-4)

# 36 கி.மீற்றர் வீதி புனரமைக்க 2013 மில்.ரூபாய் தேவை



(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான நெடுந்தீவின் பிரதான வீதி உள்ளடங்கலாக 36 கிலோமீற்றர் நீளமான வீதிகளை புனரமைப்பதற்கு சுமார் 2013 மில்லியன் ரூபாய் நிதி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்தில் மாவிலித்துறை முதல் கோட்டைக்காடு வரைக்குமான சுமார் 7.4 கிலோமீற்றர் பிரதான வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியை பயன்படுத்தும் மக்கள் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி பிரதான வீதியானது புனரமைப்பு பணிகளுக்காக கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்ட போதும் புனரமைக்கப்படவில்லை.

தற்போது குறித்த வீதியில் நான்கு கிலோமீற்றர் வீதி புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான சுமார் 36 கிலோமீற்றர் நீளமான வீதி நெடுந்தீவு பிரதேசத்தில் காணப்படுகிறது. இந்த வீதிகளை புனரமைப்பதற்கு 2013 மில்லியன் ரூபாய் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (5-4-315)

## இலங்கை சட்டக்கல்லூரி

# விரிவுரைகளை ஆங்கிலத்தில் நடத்த எடுக்கப்பட்ட முடிவுகளை மாற்றவும்

# தேரர் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கை சட்டக் கல்லூரியில் விரிவுரைகளை ஆங்கில மொழியில் மட்டும் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவை திரும்பப் பெறுமாறு அஸ்கிரிய பௌத்த பீடத்தின் தலைமைப் பதிவாளர் மேடகம தம்மநந்த தேரர் அரசை வலியுறுத்தியுள்ளார்.

சிங்கள நடுத்தர மாணவர்கள் இந்த முடிவால் கடுமையாக சிரமப்படுவார்கள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அஸ்கிரிய பௌத்த பீடத்தின் தலைமைப் பதிவாளர் இதனைத் தெரிவித்தார்.

சட்டக் கல்லூரியில் சிங்கள மொழியில் விரிவுரைகளை நடத்த அரசு தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமென்று தேரர் குறிப்பிட்டார். (நி.4)

## விமலின் கருத்தால் கோபத்திற்குள்ளான பிரதமர் மகிந்த

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வழங்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்த கருத்தால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடும் கோபத்துக்குள்ளாக்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் விமல் வீரவன்சவின் கருத்துக்கு எதிராக பொதுஜன பெரமுனவிற்குள் கடுமையான எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் கலந்துரையாட பொதுஜன பெரமுனவில் உள்ள கட்சித் தலைவர்களை பிரதமர் அழைத்த போதிலும் நீதிமன்றுக்கு செல்வதால் தன்னால் கலந்து கொள்ள முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி-4)

# பிரதேச சபை தவிசாளர்கள் இருவரின் பதவி இடைநிறுத்தம் தடைகோரி முன்வைக்கப்பட்ட மனு நிராகரிப்பு

(திருமலை)

திருகோணமலை- தம்பலகாமம் மற்றும் அம்பாறை - இறக்காமம் ஆகிய பிரதேச சபை தவிசாளர்களின் பதவியை இடைநிறுத்தி கிழக்கு மாகாண ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பிற்கு தடைவிதிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை திருகோணமலை மேல் நீதிமன்றத்தால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் குறித்த கோரிக்கை மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மனு நிராகரிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர்களின் தீர்மானத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்க முடியாது என அறிவித்த நீதிபதி, மனுதாரர்களின் கோரிக்கையையும் நிராகரித்துள்ளார்.

இரண்டு பிரதேச சபைகளின் தவிசாளர்களும் தொடர்ந்தும் செயற்படுவதற்குரிய அனுமதியை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் நீதிபதி நிராகரித்து நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய, புதிய தவிசாளர் தெரிவிற்கு கிழக்கு மாகாண ஆளுநரால் திகதி குறிக்கப்பட்டுள்ள நாளிலேயே தேர்தலை நடத்துவதற்கும் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அனுமதி வழங்கியுள்ளார். (நி-4)

# சீனாவில் சிலோன் ரீ

(கொழும்பு)

இலங்கையின் சிலோன் டீ பெயரில் உற்பத்தி செய்யப்படும் தூய்மையான தேயிலையை, சீனாவில் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்தை இலங்கை தேயிலை சபை நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளது.

சீனாவின் புஜியன் ஸ்டார் சைனா இன்டர்நஷனல் நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.


இந்த ஒப்பந்தத்திற்கு அமைய, இணையத்தளம் ஊடாகவும், அதற்கு புறம்பாகவும் சிலோன் டீயை சீனாவில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் 4 மில்லியன் கிலோகிராம் தேயிலையை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என தேயிலை சபை எதிர்பார்த்துள்ளது. (நி-4)

# பிரபல சிறுகதை எழுத்தாளர் ஷக்திக சத்குமார விடுவிப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபரின் உத்தரவின் பிரகாரம் இலங்கையின் பிரபல சிறுகதை எழுத்தாளர் ஷக்திக சத்குமார, விடுவிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.



2019 ஆம் ஆண்டு பெபரவரி மாதம் ஷக்திக சத்குமார தனது பேஸ்புக் பக்கத்தில் அர்தா என்ற தலைப்பில் நவீன சிறுகதையை வெளியிட்டு அடுத்தடுத்த நாட்களில், பிக்குகளை யும் பௌத்தர்களையும் அவமதித்ததாக தெரிவித்து பிக்குகளின் சங்கம் பொலிஸில் முறைப்பாட்டினை வழங்கியது.

இருப்பினும் குறித்த சிறுகதை மூலம் பௌத்த மதத்தையோ அல்லது எந்த சமூகத்தையோ தான் அவமதிக்கவில்லை என ஷக்திக சத்குமார குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்து ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பௌத்த பிக்குமாரை தனது எழுத்துக்களால் விமர்சித்தாரென சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆதரவு சர்வதேச உடன்படிக்கையின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் ஷக்திக சத்குமாரவின் வழக்கு விசாரணை மீண்டும் மீண்டும் தாமதங்களுக்கு உட்பட்ட நிலையில் அவரை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஊடகங்களை தணிக்கை செய்யும் திட்டம் எதுவுமில்லை-கெஹலிய



(கொழும்பு)

நாட்டில் ஊடகங்களைத் தணிக்கை செய்யும் எந்த நடவடிக்கையும் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களின் கட்டுப்பாடு மற்றும் தணிக்கை தொடர்பான கூற்றுக்கள் தவறானவை என அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களிடம் தெரித்தார்.

இதேவேளை, செய்தி வெளியீடுகளில் ஒரு சார்பு அறிக்கை மற்றும் நியாயமற்ற விடயங்களுக்குத் தீர்வுகாண மட்டுமே விவாதங்கள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

ஊடகங்கள் மிக முக்கியமான துறை என்றும், ஊடக பணியாளர்கள் ஒரு நாட்டில் மிகுந்த நம்பிக்கையுடனும் மரியாதைக்குரியவர்களாகவும் உள்ளனர் என்று வெகுஜன ஊடக அமைச்சர் விளக்கினார்.

மேலும், ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதை மக்கள் நம்புகிறார்கள். எனவே, பொது மக்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம் என அவர் தெரிவித்தார். (நி-4)


## கேள்வி விண்ணப்பம் கோரல்

### சிற்றுண்டிச்சாலை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமானது வைத்தியசாலை வளாகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச்சாலையையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தையும் ஒன்று சேர்த்து 01.03.2021 முதல் 28.02.2022 வரை குத்தகைக்கு நடத்துவதற்கு கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. இதற்கான விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத தொகை ரூபா 1000/= இனைச் செலுத்தி 08.02.2021 முதல் 21.02.2021 காலை 9.00 மணிவரை அலுவலக நேரத்தில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் 21.02. 2021 காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே (21.02.2021) காலை 11.00 மணிக்கு நடைபெறும் எமது நிர்வாக சபைக் கூட்டத்தில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 021 226 3261, 021 226 3262

Dr.V. கமலநாதன், தலைவர்,

நோயாளர் நலன்புரிச் சங்கம், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

(C-1392)


# ஆயிரம் ரூபாய் சம்பளம் குறித்த வர்த்தமானி இருவாரங்களில் வெளியாகும்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 1,000 ரூபாயாக அதிகரிக்கும் திட்டம் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தமானி அறிவிப்பு மூலம் வெளியிடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் பேசிய பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும் என்றும் பின்னர் இந்த திட்டம் சட்டமாக மாறும் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும் இறுதி முடிவு எடுக்கப்படும் முன்னர் பெருந்தோட்ட உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் கவலை தொடர்பாகவும் அரசாங்கம் கவனத்தில் எடுக்கும் என்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியானதும் தொழிலாளர்களுக்கான அதிகரித்த ஊதியத்தை தோட்ட உரிமையாளர்கள் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். (நி-4)

# ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் சத்தியாக்கிரகப் போராட்டம்

(வவுனியா)

**வவுனியா பூந்தோட்டம் சிறிநகர் கிராம மக்கள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டுள்ளனர்.**



20 வருடங்களாகியும் தமது கிராமத்திற்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை, உட்கட்டுமான வசதிகள் செய்து தரப்படவில்லை, மைதானம் இன்மை, வீட்டுத்திட்டம் வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

பல வருடங்கள் ஆகியும் எமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. இது தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எமது விடயத்தில் எவரும் கரிசனை கொள்ளவில்லை.

காணி உறுதிப்பத்திரம் வழங்கினால் அதனை வங்கிகளில் வைத்து கடன் பெற்றாவது வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியும்.

அதுவும் வழங்கப்படவில்லை. அத்துடன் கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள புணர்வாழ்வு இணைப்பு காரியாலயம் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளிவரும் கழிவுநீர் எமது கிராமத்திற்குள்ளேயே வருகிறது.

தமது அடிப்படைக் கோரிக்கைகள் தொடர்பாக தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. எனவே தமது கோரிக்கைகளிற்கு தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தனர்.

போராட்ட இடத்திற்குச் சென்ற பிரதேச செயலாளர் ந.கமலதாசன் மற்றும் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடினர். முதற்கட்டமாக கிராமத்தில் உள்ள 95 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், ஏனைய காணிகள் குளத்தின் ஒதுக்கத்திற்குள் வருகிறது.

அதனை உரிய திணைக்களம் விடுவித்துத் தந்தால் அதற்கான உறுதிப்பத்திரங்களையும் வழங்க முடியும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்ததுடன் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக சாதகமாக ஆராய்வதாக தெரிவித்தார். அத்துடன் கிராமத்தினையும் பார்வையிட்டனர்.

இதேவேளை போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு வருகை தந்த நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் கிராமத்தின் பின் பகுதியில் குளத்தின் நீரேந்து பகுதியில் 55 பேரின் காணிகள் உள்ளது. அதனை விடுவிப்பது தொடர்பாக தமது தலைமை அலுவலகமே தீர்மானிக்க முடியும்

எனவே நீங்கள் கோரிக்கைகளை வழங்கினால் மேலதிக நடவடிக்கைகளுக்காக அதனை தமது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தனர்.

எனினும் குறித்த மக்களின் போராட்டம் தொடர்ந்து இடம் பெற்றது. (5-4-299)

# பிரதேச செயலகம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் "மாந்தை வடக்குக்கு" எனும் புதிய பிரதேச செயலகப் பிரிவொன்றை அமைப்பது தொடர்பான தீர்மானத்தின் முன்மொழிவை தேசிய பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் நோக்கில் உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை களின் தவிசாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் "மாந்தை வடக்குக்கு" எனும் புதிய பிரதேச செயலகப் பிரிவை அமைப்பது என்ற தீர்மானத்தின் முன்மொழிவை பெற்றுக்கொள்ளப்பட்டு தேசிய பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (5-4)

# வவுனியா பிரதேசத்தில் நீர் வழங்கல் தடைப்படும்

(நெளுக்குளம்)

வவுனியா நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் வரும் வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் உள்ள நீரிணைப்புக் குழாய்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் இரவு 10 மணிவரை நீர் வழங்கல் செயற்பாடு தடைப்படும்.

இதில் வவுனியா நகரம், குருமன்காடு, சூசைப்பிள்ளையார் வீதி, மன்னார் வீதி மற்றும் வைரவப்புளியங்குளம் பகுதிகளில் நீர் வழங்கல் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது தனது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்ட மணல் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)



யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவர் பாலச்சந்திரன் கடந்த 4, 5 ஆம் திகதிகளில் வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.



கனடாவில் வசிக்கும் தேவபாலன்- கஜந்தினி தம்பதியர் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம், குமரன் விளையாட்டுக்கழகம் இணைந்து செயற்படுத்தும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான 4 துவிச்சக்கரவண்டிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. அ.ஸ்டான்லி டி மெல்லிடம் அண்மையில் வழங்கப்பட்டன.

# இடியனுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

பூநகரி பொலிஸ் விசேட குற்றத் தடுப்பு பிரிவுக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் உள்ளூர்த் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரமன்கிராய் வெட்டக் காடுப் பகுதியில் இடம்பெற்றது. இதன்போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பூநகரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-100-316)

# இராசிபலன்

10.02.2021
தை 28, புதன்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 1.32 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 2.33 மணிவரை
சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம், திருவாதிரை
அமிர்த சித்தம் வளவன்


மேஷம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மிதுனம்

ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து நடப்பது நல்லது.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, வராத உறவினர்கள் உங்களின் வீடுகளுக்கு வரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


சிம்மம்

நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


கன்னி

உதிரி வருமானங்கள் பெருகும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


துலாம்

வருமானம் வரும் வழியைக்கண்டு கொள்வீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.


மகரம்

சிந்தனை மிகுதியான நாள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், போசன சுகமுண்டு, உடல் நலன் சீராகும்.


கும்பம்

சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

நம்மால் செய்ய முடிந்ததைச் செய்வதே தர்மம்.

# பால் உற்பத்தியாளர்களின் கடன் தொகையை அதிகரிக்க பிரதமர் அறிவுரை

(கொழும்பு)

**பால் உற்பத்தியாளர்களுக்காக 2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட 5 இலட்சம் ரூபா கடன் தொகையை ஒரு மில்லியனாக உயர்த்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.**

பிற பொது சலுகைகள் உட்பட பட்ஜெட்டில் முன் மொழிவுகளை அமுல்படுத்துவது தொடர்பான நிதி அமைச்சகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டத்தின்போதே பிரதமர் இந்த உத்தரவுகளை பிறப்பித்தார்.

அதன்படி அடுத்த வாரம் முதல், பால் உற்பத்தியாளர்கள் தங்கள் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 4 சதவீத வட்டிக்கு ஒரு மில்லியன் ரூபா வரை கடன் தொகையை பெற்றுக் கொள்ள முடியும்.



அரசு மற்றும் அரசு சாரா ஊழியர்களின் கூரைகளில் சோலார் பனல்களை நிறுவுவதற்கு தற்போது 4 சதவீத வட்டி விகிதத்தில் 8 இலட்சம் ரூபா வரை கடன்கள் வழங்கப்படுகின்றன.

நெல் வாங்க சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன் போது சுட்டிக்காட்டினார்.

நெல் வாங்குவதற்காக கடன்களை விரைவாக வழங்குமாறு பிரதமர் அறிவுறுத்தியதுடன், இது பீர் உற்பத்தி போன்ற துணை தயாரிப்புகளுக்கு பெரிய அளவில் நெல் வாங்குவதை மட்டுப்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டினார். (நி-4)

# மின்கட்டணத்தை அதிகரிக்கும் திட்டம் எதுவுமில்லை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டங்கள் எதுவும் இல்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தவிசாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் புதிய தவிசாளராக நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் கருத்து தெரிவித்த அவர், தற்போதைய மின்சார கட்டணங்கள் ஒப்பீட்டளவில் அதிகம் என சுட்டிக் காட்டினார்.

இதேவேளை எதிர்காலத்தில் மின்சார செலவைக் குறைக்க மின்சார உற்பத்தியில் மேலும் புதுப்பிக்கத்தக்க மின்சார ஆற்றலை சேர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடைய தேவையான உதவி வழங்கப்படும் எனவும் அவற்றின் மூலம் மின்சாரத் தேவையில் 70 சதவீதத்தைப் பெறுவதே அரசாங்கத்தின் இலக்கு என்றும் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். (நி-4)

# தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் தலைமறைவான தம்பதியினர் கைது

(கொழும்பு)

கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பின்னர் தலைமறைவான தம்பதியினர் கொஸ்வத்தை, பொத்துஅடவன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அதிகாரிகளினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவலை தொடர்ந்து கொஸ்வத்தை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஹெந்தல, வத்தளை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கணவர் ஜா-எல பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் நபர் எனவும் அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தொற்றாளராக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த நபர் அவரது மனைவியுடன் தப்பிச் சென்று கொஸ்வத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த நபர் தங்கொடுவை வைத்தியசாலையிலும், மனைவி மாரவில வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

# விசாரணைகளை மூன்று மாதத்திற்குள் முடிக்க சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

கடுமையான குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான குற்றவியல் விசாரணை நடவடிக்கைகளை மூன்று மாதங்களுக்குள் முடிக்குமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு சட்டமா அதிபர் டப்புல்ல டி லிவேரா அறிவுறுத்தியுள்ளார்.

கடுமையான குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் விசாரணைகளை முடிவுறுத்தி சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்ய பொலிஸ்மா அதிபருக்கு இவ்வாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (நி-4)

# எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மீது தாக்குதல்

(கரணவாய்)

எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மீது மேற்கொள்ளப்பட்ட போத்தல் தாக்குதலில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் நெல்லியடியில் உள்ள கட்டை வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தமக்கு உடனடியாக எரிபொருள் நிரப்பவில்லை என முகாமையாளர் மீது போத்தலினால் தாக்கினர்.

இதில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (5-4-60)

# நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிடல் ஆரம்பம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் செயற்பாடு இன்று முதல் ஆரம்பம்.

அதனடிப்படையில் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையிலும் எதிர்வரும் 15,16,17 ஆம் திககிகளில் வடமராட்சி தெற்கு மேற்கு உடுப்பிட்டி பிரதேச சபை அலுவலகத்திலும் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மா.பிரதீபன் அறிவித்துள்ளார். (5-4)

# பொருட்களின் விலைகுறைப்பு ச.தொ.சவில் மக்கள் முண்டியடிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் அரசாங்கத்தினால் விலை குறைப்பு செய்யப்பட்ட 27 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு பெருமளவானோர் முண்டியடித்து வருகின்றனர். எனினும் வெள்ளைச் சீனி ஒரு கிலோ 99 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. வாடிக்கையாளர் ஒருவருக்கு இரண்டு கிலோ மட்டுமே வழங்கப்படுகின்றதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர் .

இது குறித்து மேலும் தெரிவிக்கையில் ,

கடந்த 7 ஆம் திகதி முதல் அரசாங்கத்தினால் குறிப்பிட்ட 27 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதனை பெற்றுக்கொள்வதற்கு சதொச விற்பனை நிலையங்களில் அதிகளவானோர் நீண்ட வரிசைகளில் காத்திருந்து வருகின்றனர் .

எனினும் பொருட்கள் கையிருப்புக்களில் இல்லை என்பதால் சில பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக சதொச நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.(5-4-299)

# நிர்வாகக்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் .போதனா வைத்தியசாலைக் கிளையின் 2021 ஆம் ஆண்டுக்கான நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அந்த வகையில், தலைவராக மருத்துவர் சி.மதிவாணன், உபதலைவர்களாக மருத்துவர் ப.ஸ்ரீகிருஷ்ணா, மருத்துவர் றொபின்சன், செயலாளராக மருத்துவர் த.மயூரன், உப செயலாளராக மருத்துவர் சு.நிஷாந்தன், பொருளாராக மருத்துவர் க.ஜனார்த்தனன், பத்திராதிபராக மருத்துவர் க.உமாசுதன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் அத்துடன் செயற்குழு உறுப்பினர்களாக மருத்துவர்கள் ச.நிமலன், உ.மயூ ரதன், ந.சிறிசரவணபவானந் தன், எம்.யூ.டி.நவரத்ன, க.கணேஷானந்தன், க.சசிதரன், ச.அறிவுச்செல்வன், கி.சிறிபாஸ்கரன், த.சதீசன், கு.சைலவன், கு.அஜந்தன்,இ.கஜானன், யோ.ஜெயந்த், க.லபோசன, வே.குகதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5-4)

# இயற்கைமுறை நெற்செய்கை அறுவடை

(முறிகண்டி)

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தினால் இயற்கை முறை விவசாயம் மற்றும் பாரம்பரிய விதை தானியங்களை பாதுகாக்கும் நோக்குடன் செய்கை அறிமுகம் செய்யப்பட்டது.

அதற்கு அமைவாக கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கரியாலை நாகபடுவான் பகுதியில் அந்த நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பெண்கள் சிறு குழுக்கள் ஊடாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



குறித்த குழுவினால் அழிவடைந்துவரும் மற்றும் அப்பிரதேசத்திற்கு ஏற்றதான "பச்சைப்பெருமாள்" எனும் நெல்லினம் 5 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டது.

குறித்த செய்கை பண்ணப்பட்ட நெல்லினத்தின் விளைச்சல் நேற்று அறுவடை செய்யப்பட்டது.

இதன் போது அறுவடை செய்யப்பட்ட நெல்லினத்திலிருந்து பொங்கலும் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (5-4-100)


# பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சி தரம் மற்றும் வட மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் பட வரைஞர் பயிற்சி தரம் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (5-4)



நீர்ப்பாசன செழுமை" கிராமிய குளங்களை அண்டியுள்ள 5000 விவசாய நீர்ப்பாசன தொகுதிகளை மறுசீரமைக்கும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் யாழ்.மாவட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி கிராமத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாண பிரதேச செயலகர், கமநல சேவை திணைக்களத்தின் வடமாகாண பிரதிப்பணிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படம்: மகாலிங்கம்)

# விசமிகளால் வாடி தீக்கிரை



(பொற்பதி)

கட்டைக்காட்டில் கரைவலை வாடி ஒன்று விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டன. இது தொடர்பாக மேலும் தெரியவருவது,

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு ஜே/433 கிராம உத்தியோகத்தர் பிரிவின் கடற்கரையில் கரைவலை வாடிக்குள் வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான கரைவலை உட்பட கடற்றொழில் உபகரணங்கள் இவ்வாறு விசமிகளால் எரிக்கப்பட்டுள்ளன.

சுமார் ஐம்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்கள் அந்த வாடியினுள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த கரைவலை வாடியினுள் பெறுமதிமிக்க 60 இற்கு மேற்பட்ட றோல் கம்பான் 12 மேற்பட்ட மடிகள் ஒரு பெரிய சலவாய் மற்றும் ஒரு யமகா வெளியிணைப்பு இயந்திரம் என்பவற்றுடன் வலைகள் உள்ளடங்கலாக பல பெறுமதி மிக்க கடற்றொழில் உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்த வாடியே நேற்று அதிகாலை இனம் தெரியாத நபர்களால் தீயிடப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார், கிராம மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-64-60)

# 10 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய தொடர் போராட்டம் கட்டுப்படுத்த பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்






(மியன்மார்)

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக தலைநகர் நெய் பை தவ் நகரில் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் மீது அந்நாட்டு பொலிஸார் நீர்த்தாரை பிரயோகித்துள்ளனர்.

மியன்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்த்தும், ஆங் சாங் சூகியை விடுதலை செய்யக்கோரியும் தொடர்ந்து மக்கள் மூன்றாவது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தங்களுக்கு இராணுவ ஆட்சி வேண்டாம், ஜனநாயக ஆட்சி தான் வேண்டும் என்ற பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டு பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்த களமிறங்கியுள்ள பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் நடத்தி போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கலைத்தனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகப்பெரிய போராட்டம் மியன்மாரில் வெடித்துள்ளது. (நி-4)

# போராட்டக் களத்தில் செடிகள் வளர்க்கும் விவசாயிகள்



(டில்லி)

இந்தியாவில் டில்லியில் போராட்டம் நடத்தும் விவசாயிகள் அங்கு உருளைக் கிழங்கு, கரும்பு, மலர்ச் செடிகள் உள்ளிட்டவற்றை வளர்த்து வருகின்றனர்.

வேளாண் சட்டங்களுக்கு எதிராக டில்லியில் விவசாயிகள் அமைத்துள்ள போராட்டக்களத்தை சுற்றி பொலிஸார் இரும்பு வேலிகள், முள்வேலிகள் கொண்டு அடைத்துள்ளனர்.

மேலும் வீதிகளில் இரும்பு கம்பிகளையும் பதித்து போராட்டக்காரர்களை தனிமைப்படுத்தி உள்ளனர்.

ஆனால் அந்த கோட்டைக்குள்ளேயும் விவசாயிகள் சிலர் தோட்டம் அமைத்து பராமரித்து வருகின்றனர். இதற்காக செடிகளையும், மரக்கன்றுகளையும் வாங்கி வந்து நட்டு வளர்த்து வருகின்றனர்.

'அரசு எங்களை சுற்றி வலிமையான இரும்பு வேலி அமைக்கிறது. ஆனால் நாங்களோ மலர்ச்செடிகளை வளர்க்கிறோம்.

இதுதான் எங்கள் செய்தி. எங்கள் மீதான அடக்குமுறையை நாங்கள் அன்பினால் எதிர்கொள்வோம்' என்று தெரிவித்தனர். (நி-4)

# அணுசக்தி ஒப்பந்தங்களுக்கு இணங்கும் வரை பொருளாதாரத் தடை நீக்கப்படாது-அமெரிக்கா

(வோஷிங்டன்)

2015ஆம் ஆண்டின் அணுசக்தி ஒப்பந்தங்களுக்கு ஈரான் இணங்கும்வரை அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கூறுகையில், '2015ஆம் ஆண்டின் அணுசக்தி ஒப்பந்தங்களுக்கு ஈரான் இணங்கும்வரை அந் நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படாது.

சில நாட்களுக்கு முன்னர், அனைத்து விதிமுறைகளுக்கும் ஈரான் ஒப்புக்கொண்டால் அணுஆயுத ஒப்பந்தத்தில் இணைவதில் அமெரிக்கா தயாராக இருக்கிறது. ஈரானுடனான தங்களது உறவை மேம்படுத்தும் வாய்ப்பாக இதனைக் கருதுவோம்' எனத் தெரிவித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அந்நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதை செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாக கூறி அதிலிருந்து விலகினார்.

மேலும், ஈரான் மீது மீண்டும் பொருளாதார தடைகளை விதித்து வந்தார். இதனால் ஆத்திரமடைந்த ஈரான், அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறியது. (நி-4)

# இந்தியாவில் பாடசாலை மாணவர்களால் செயற்கைக் கோள்கள் தயாரிப்பு

(டில்லி)

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் தயாரித்த 100 மிகச்சிறிய செயற்கை கோள்கள் உலக சாதனை முயற்சியாக ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

மாணவர்களால் உருவாக்கப்பட்ட 100 பெம்டோ செயற்கைக்கோள்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராமநாதபுரம் இராமேஸ் வரம் ராமர் பாதம் அருகே உள்ள மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இரண்டு ஹீலியம் வாயு நிரம்பிய பலூன் மூலமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த செயற்கை கோள்கள் ஒவ்வொன்றும் 30 கிராம் முதல் 50 கிராம் வரை எடை கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

ஹீலியன் பலூன் இலக்கை அடைந்த பின் அத்துடன் இணைக்கப்பட்ட செயற்கைக் கோள்கள் பாரசூட் மூலமாக பூமியை வந்தடையும்.

இந்த செயற்கை கோள்களால் சுற்றுச்சூழல் பாதிப்பு, காற்றில் ஏற்பட்டுள்ள நச்சுத்தன்மைகள், காற்றின் வேகம், புவி வெப்பமடைதல் உள்ளிட்ட 10 இற்கும் மேற்பட்ட விபரங்கள் கணனிகளில் பதிவு செய்யப்பட்டு சேகரிக்கப்படும் என செயற்கை கோள்களை உருவாக்கிய மாணவர்கள் தெரிவித்தனர்.

பெம்டோ செயற்கைக் கோள்களை உருவாக்க மாணவர்களுக்கு பயிற்சி அளித்தவர் இளம் விஞ்ஞானி ஆனந்தகாலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மியன்மாருடனான உறவை நிறுத்திய நியூசிலாந்து




(வெலிங்டன்)

நியூசிலாந்தின் பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் மியன்மாருடனான அனைத்து உயர்மட்ட அரசியல் மற்றும் இராணுவ தொடர்புகளையும் அரசாங்கம் நிறுத்தி வைப்பதாக நேற்று அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து மியன்மாரின் இராணுவத் தலைவர்கள் மீது பயணத் தடையும் விதிக்கும். மேலும் நாட்டிற்கான அதன் உதவித் திட்டத்திற்கு இராணுவ அரசாங்கத்துடன் வழங்கப்படும் அல்லது பயனளிக்கும் திட்டங்கள் அடங்காது என்பதை உறுதி செய்யும் என்று ஆர்டெர்ன் தெரிவித்தார். (நி-4)

# கில்லாடிகளை பந்தாடியது சுண்டுக்குளி ஈகிள்ஸ்







ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணம் 2021 தொடரின் 7ஆவது தகுதி காண் போட்டி கடந்த 4ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி அரியாலை கில்லாடிகள் அணியை 3 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் ஆகீஸன்-23, சுயந்தன்-15, கானாமிர்தன் 14, பிரபுவன் 17 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் சுண்டுக்குழி அணியின் பிருந்தா 2, யதுஸன் 2, அபிநாஸ் 2, லோகதீஸ் 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். 114 வெற்றி இலக்குடன் களமிறங்கிய சுண்டுக்குளி ஈகிள்ஸ் 19.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியில் சௌமி 25, யதுஸன்-27, அபிநாஸ் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் அரியாலை அணியின் சுயந்தன் -4, வியாஸ்கான்-1, சுரேந்திரன் -1, மதுஸன்-1 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். .(4)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## அறிக்கையின் பிரதியை தமக்கு வழங்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையின் பிரதியொன்றை தமக்கு வழங்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பேராயரின் ஊடக பேச்சாளர் பேராசிரியர் கமிலஸ் பெர்னாண்டோ ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்து அறியப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தொடர்பில் நாட்டின் சட்டத்திற்கு அமைய செயற்படுமாறு பேராயர் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## மாணவர்களுக்கு புகையிலை விற்பனை செய்தவர் கைது

(காலி)

பாடசாலை மாணவர்களுக்கு புகையிலை விற்பனை செய்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் காலி-ஹிரிபுர பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் புகையிலை அடங்கிய 19 பொதிகளை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய குறித்த சந்தேக நபர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அவர் புறாக்களை விற்பனை செய்வதாகக் கூறி பாடசாலை மாணவர்களுக்கு புகையிலை பொதிகளை விற்பனை செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2228

### சரவணா




### அஜந்தா




### விஸ்வா





### அபிராமி




### ஸ்ரீமத்




### கபிலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்

## ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி தீர்மானம்

(கொழும்பு)

கொவிட் -19 தொற்று நோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலா மற்றும் ஆடை போன்ற துறைகளுக்கு நிதியளிக்க ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) ஒப்புக் கொண்டுள்ளதாக அரசாங்கம் நேற்று தெரிவித்துள்ளது.


இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்கான பொருத்தமான ஒப்பந்தத்தில் நுழைவதற்கான திட்டத்திற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கொவிட் தொற்றால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலா, ஆடை, கட்டுமானம், வர்த்தகம், உற்பத்தி, விவசாய ஏற்றுமதி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளுக்கு நிதியுதவி வழங்கப்படும். ( நி-4)

# கே.கே.எஸ்.சீமெந்து தொழிற்சாலையில் பயன்பாடற்ற பொருட்களை அகற்ற அனுமதி

(கொழும்பு)

**காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் காணப்படும் பயன்பாட்டுக்கு உதவாத பொருட்களை அகற்றுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**



காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் சீமெந்து உற்பத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் அமைச்சு திட்டம் தயாரித்துள்ளது.

இது தொடர்பில் பணிகளை முன்னெடுக்கப்பட்ட ஐவர் குழுவின் பரிந்துரைக்கு அமைய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பாவனைக்கு உதவாத கட்டடங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள், வார்ப்புகள் மற்றும் இரும்புத் துண்டுகளை அரச பிரதம விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் அரச பெறுகை செயல் முறையின் கீழ் அகற்றுவதற்கு நேற்று முன்தினம் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (நி-4-33)

# கோட்டாபய மற்றும் மகிந்தவின் உருவப் பொம்மைகளை எரிக்க முயற்சி

## கொழும்பில் பதற்றம்



(கொழும்பு)

கொழும்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று நடத்திய போராட்டத்தின் போது பதற்றமான சூழ்நிலை எழுந்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் உருவப் பொம்மைகளுக்கு தீ வைக்க முயன்றதை அடுத்து பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

சிவில் கடமையில் இருந்த கடற்படை அதிகாரிகள் அந்த நேரத்தில் உருவப்பொம்மைகளை பறிமுதல் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. இது போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலைக்கு வழிவகுத்தது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பூச்சி வைத்தியம்

எங்கே போயிட்டு வருகின்றீர்கள்? என்று கேட்டேன் எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தரைப் பார்த்து.

வைத்தியசாலைக்கு என்றார்.எந்த வைத்தியசாலைக்கு என்றேன். மாட்டு வைத்தியசாலைக்கு என்றார். என்ன விடயம் என்றேன்.மாமனாருக்கு உடம்பு சரியில்லை அது தான் மாட்டு வைத்தியசாலைக்குப் போய்விட்டு வருகின்றேன் என்றார். அடப்பாவி..அதற்கு அந்த வைத்தியசாலைக்கா போவார்கள்? என்றேன். ஆச்சரியமாக.

அட அது இல்லையப்பா..முதலில் எங்கள் குடும்ப டாக்டரைத் தான் தேடிக் கொண்டு போனேன். அவர் அந்த நேரத்திலே அவர் வளர்க்கின்ற நாய்க்குட்டிக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லி அதைத் தூக்கிக் கொண்டு மாட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கின்றதாக சொன்னார்கள். அது தான் அங்கே போய் அவரைச் சந்தித்து விடயத்தைச் சொல்லிவிட்டு வருகின்றேன் என்றார்.

பின்பு தான் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. பொதுவாக நமக்குத் தெரிந்த வரையில் டாக்டர்கள் இரண்டு வகை.நமக்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள் ஒரு வகை. எங்களிடம் இருக்கின்ற ஆடு-மாடு கோழிக்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள் ஒருவகை.இப்பொழுதுதான் எனக்குத் தெரியும். இன்னொரு வகையான டாக்டர்களும் உண்டு என்பது. அது யார் என்றால் பூச்சிகளுக்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள். அதாவது பூச்சி டாக்டர்கள்.வெளிநாடுகளிலே அப்படியெல்லாம் கூடச் சில பேர் இருக்கின்றார்களாம்.

பிரிட்டனிலே யார்க்ஷைர் வட்டாரத்திலே ராதர்ஹாம் என்று ஒரு ஊர். அங்கே ஒரு விலங்கியல் மருத்துவர்.பெயர் டாக்டர் லான்ஸ் ஜெப்சன். அவர் வைத்தியசாலை வாசலில் பார்த்தீர்கள் என்றால் தினமும் நிறையப் பேர் நின்று கொண்டிருப்பார்கள்.. கையிலே கண்ணாடிக் கூண்டோ ..தகர டப்பாவோ இருக்கும்.

அதற்குள்ளே ஏதாவது பூச்சிகள் இருக்கும். அதற்கு வைத்தியம் செய்ய வந்தவர்கள் தான் அவர்கள் எல்லாம்.சிலந்திப் பூச்சி ..பல்லி..தேள்.. பாம்பு.. இப்படி ஏதாவது இருக்கும். பொழுது போக்காக சிலபேர் நாய்..பூனை.. கிளி.. மைனா... புறா... இப்படி ஏதாவது வளர்க்கின்றார்கள்.. அது மாதிரி இப்பொழுதெல்லாம் தேள் ..பல்லி பாம்பு.. பூச்சி.. இதையெல்லாம் வளர்க்க ஆரம்பித்துவிட்டார்களாம்.இது ஒரு புது பாசன் இப்பொழுது.

கூண்டுக்குள்ளே டப்பாவுக்குள்ளே போட்டு வளர்ப்பது.. அதுக்கு ஏதாவது நோய் வந்துவிட்டால் வைத்தியம் செய்வதற்கு டாக்டரிடம் வந்துவிட வேண்டியது. இரத்தம் உறிஞ்சும் அட்டைகள் கூட இவர்களிடம் வைத்தியத்திற்கு வருகின்றதாம். சிலந்திகளிலே செங்கால் சிலந்தி என்று ஒரு வகை. மத்திய அமெரிக்கக் காடுகளிலே இது.. அதிகம். சிலந்திகளிலேயே மிகவும் விலை உயர்ந்தது இந்த ரகம் தான். கால்களிலே சிவப்புக் கோடுகள் இருக்கும். இந்த இனம் இப்பொழுது குறைந்து கொண்டு வருவதால் சர்வதேச விதிகளின் படி இவற்றின் ஏற்றுமதி-இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.அதனால் இதை வளர்க்கின்றவர்கள் வீட்டுக்குள்ளேயே இனவிருத்தி மூலமாக பெருக்கி விற்பனை செய்து கொண்டு வருகின்றார்கள்.

இந்த வகைச் சிலந்தி தான் இப்பொழுது வைத்தியத்திற்கு அதிகம் வருகின்றதாம்.சரி.. இதற்கெல்லாம் எப்படி வைத்தியம் செய்கின்றார்கள்? முதலில் அதைக் குளிர்சாதனப் பெட்டியின் வழுவழுப்பான சுவரில் விட்டவுடனே அதுஎல்லாம் மெதுவாக இறங்கிவரும். அப்பொழுது அதன் நோயைக் கண்டுபிடிக்கிறது சுலபம்.அப்புறம் அதற்கு கிருமிகளைக் கொல்லும் மருந்துகளையோ வலி நிவாரண மருந்துகளையோ கொடுப்பார்கள். கால் உடைந்த சிலந்திகளுக்கு பசையைக் கொண்டு ஆப்ரேஷன் செய்வார்கள்.சில சிலந்திகளுக்கு உடைந்த காலை எடுத்துவிட்டால் புதியகால் வளர்ந்துவிடும்.

சிலந்திகளை மனிதர்கள் கையிலே எடுக்கின்ற பொழுது.. அது பயந்து போய் கீழே குதிக்கும்.. அதனால் கால் உடைந்து விடுகின்றது. இல்லை என்றால் வயிறு சேதமடைகின்றது. அந்த நிலைமையிலே வருகின்ற சிலந்திகளுக்கு மயக்க மருந்து கொடுத்து ஆபரேஷன் செய்வார்களாம்.

பார்த்தீர்களா பூச்சிகளுக்கு வந்த வாழ்வை.எங்கள் ஊரிலேயும் வீடுகளிலே பூச்சிகள் வளர்வது உண்டு.ஒருத்தர் வந்தார். எனக்கு மூவாயிரம் கரப்பான் பூச்சிகள் அவசரமாக தேவைப்படுகின்றது. எங்கே கிடைக்கும்? என்று கேட்டார்.

கரப்பான் பூச்சியா எதற்கு? என்று கேட்டேன். அது வந்து வேறு ஒன்றுமில்லை. நான் குடியிருக்கின்ற வாடகை வீட்டைக்காலி செய்யப் போகின்றேன்.. வீட்டுச் சொந்தக்காரர் என்ன சொல்கின்றார் என்றால்.இந்த வீட்டுக்கு நான் குடிவந்த பொழுது எப்படி இருந்ததோ அதே நிலைமையில் விட்டுவிட்டுப் போக வேண்டும் என்று வீட்டுக்காரர் சொல்லியிருக்கின்றார்... அதனால் தான் கேட்டேன்.. என்றார்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

01



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அமெரிக்க அரசியலின் போக்கு உலகம் முழுக்கவே பெரும் தாக்கத்தை உண்டாக்கும் என்பதால், அமெரிக்க ஜனாதிபதி தெரிவினை மற்றும் அதன் கள நிலவரங்களை சர்வதேசங்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது. அமெரிக்க ஜனாதிபதி தெரிவுக்கான தேர்தல் நான்கு வருடத்திற்கு ஒரு முறை நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின் வரும் முதல் செவ்வாய்க்கிழமையில் நடைபெறும். அந்தவகையில் சென்ற ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி அமெரிக்க தேர்தல் நடைபெற்றது. அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டப்படி (20 ஆவது திருத்தம்) தேர்தல் நடந்து அடுத்த ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதிக்கான பதவியேற்பு நாள் ஆகும்.இதன் பிரகாரம் ஜனவரி 20 ஆம் திகதி 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பிடன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிஸ் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஏற்பட்ட சர்ச்சை

சென்ற ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதிய அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பே இத் தேர்தல் பற்றிய சர்ச்சைகள் தொடங்கி இருந்தன.இச் சர்ச்சைக்கு காரணம் ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ஆகியோருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில் முடிவுகள் இருவருக்கும் பொசிட்டிவ் (Positive) என் வந்ததேயாகும். இது பற்றி இப்போது ஆராய்வோம்.

**சென்ற ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதிய அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே இத் தேர்தல் பற்றிய சர்ச்சைகள் தொடங்கியிருந்தன. ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ஆகியோருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில் முடிவுகள் இருவருக்கும் பொசிட்டிவ் (Positive) என வந்ததே அச்சர்ச்சைக்கு காரணமாக இருந்தது.**

ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வெளிவந்த பின்வரும் செய்தி அமெரிக்க மக்களை அதிர்ச்சி அடையச் செய்திருந்தது. "ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ஆகியோருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வருவதற்கு முன்பாகவே தனது நிகழ்ச்சிகளை ஒத்திவைத்த ட்ரம்ப், தானும் தனிமைப்படுத்திக் கொள்ளப் போவ தாக கூறியிருந்தார். இந்நிலையில் ட்ரம்ப் மற்றும் மெலனியா ட்ரம்ப்

*சென்னை பெசன்ட் நகரில் உள்ள தாத்தா வீட்டுக்கு கமலா ஹாரிஸ் (பின்வரிசையில் இடது பக்கம்) வந்தபோது எடுத்த படம். வலது ஓரத்தில் அவரது சகோதரி மாயா ஹாரிஸ்*



*அமெரிக்கா துணை ஜனாதிபதி தமிழ் பெண் கமலா ஹாரிஸின் இளமைப்பருவம்*

ஆகியோரின் கொரோனா பரிசோதனை முடிவுகள் வெளிவந்தன. அதில், இருவருக்கும் பொசிட்டிவ் **(Positive)** என வந்துள்ளது. "இத் தகவலை ஜனாதிபதி ட்ரம்ப் தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார். அத்துடன், தான் உடனடியாக தனிமைப் படுத்தும் நடைமுறை மற்றும் சிகிச்சையை தொடங்கவுள்ளதாகவும் கூறியிருந்தார். அதன்பின் ட்ரம்ப் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார். இச் செய்தி அந்நேரத்தில் பல அச்சங்களையும் கேள்விகளையும் எழுப்பின. ஆனால் அவர் ஓரிரு தினங்களில் தான் சுகமடைந்து விட்டதாகக்கூறி கடமைக்கு திரும்பியதோடு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டார். அந்நேரத்தில் ஏற்பட்ட இச்சர்ச்சைகள் பற்றியும் அது சம்பந்தமாக எழுந்த கேள்விகள் பற்றியும் கீழே நோக்கப்படுகின்றன.

### ஜனாதிபதித் தேர்தல் தள்ளி வைக்கப்படுமா? என்ற சர்ச்சை எழுந்தது

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதில் ட்ரம்பின் தனிமைப்படுத்தல் நிச்சயமாக ஒருதாக்கம் செலுத்தும் என்றும் அதனால் ஜனாதிபதி தேர்தல் தள்ளிவைக்கப்படுமா? என்றும் அப்படி தள்ளிவைக்கப்பட சாத்தியம் உள்ளதா? என்ற கேள்விகள் எழுந்திருந்தன. அவ்வாறு தேர்தல் தள்ளி வைக்கப்பட வேண்டுமாயின் தேர்தல் திகதி மாற்றப்படவேண்டும். தேர்தல் திகதியை மாற்றுவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் (அமெரிக்க காங்கிரஸ் தான்) முடிவு செய்ய முடியும். ஜனாதிபதியால் முடிவு செய்ய முடியாது. இதற்கு அமெரிக்க பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒப்புதல் அளிக்க வேண்டும். செனட்சபை ஒப்புதல் அளித்தாலும் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் பெரும்பான்மையாக இருக்கும் பிரதிநிதிகள் சபையில் இதற்கான ஒப்புதல் கிடைப்பது மிகவும் கடினமாக விருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஒருவேளை தேர்தலைத் தள்ளி வைப்பதற்கு இரண்டு அவைகளும் ஒப்புக் கொண்டாலும் கூட அமெரிக்க சட்டங்களின் படி ஜனாதிபதியின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் மட்டுமே. அதன்படி 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நண்பகலில் ட்ரம்பின் ஜனாதிபதி பதவி தானாகவே முற்றுப் பெறும். இந்தத் திகதியை மாற்ற வேண்டுமானால் அதற்கு அமெரிக்காவின் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அல்லது மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அதன் பின்பு நான்கில் மூன்று பங்கு அமெரிக்க மாநில அரசுகளும் அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். மேலும் சில அமெரிக்க மாநிலங்களில் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி (இச் சூழ்நிலை வந்தபோது) 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியும் இருந்தது. எனவே தேர்தலைத் தள்ளி வைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றே சொல்லலாம் என்ற கருத்து இச்சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ட்ரம்பால் அப்போதைய ஜனாதிபதி பதவிக்கான வேலைகளைச் செய்ய முடியாமல் போனால் என்ன நடக்கும் என்று அமெரிக்க மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கினார்கள்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை ட்ரம்ப் தான் ஜனாதிபதி. அதாவது இச் சூழ்நிலை வந்தபோது ட்ரம்ப் தான் ஜனாதிபதியாக இருந்தார். எனவே அவர் அச்சூழ்நிலையில் தனது நாளாந்தப் பணிகளை செய்ய முடியாத அளவுக்கு அவரது உடல் நிலை மோசமானால், துணை ஜனாதிபதியிடம் ஜனாதிபதி தனது பொறுப்புகளை ஒப்படைக்க அமெரிக்க அரசு அமைப்பின் 25 ஆவது சட்டத் திருத்தம் அனுமதிக்கிறது என்று பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

அவரது உடல் நிலை மோசமானால் அதன்படி துணை ஜனாதிபதி, பொறுப்பு ஜனாதிபதியாக செயற்பட முடியும். ஜனாதிபதி உடல் நிலை மீண்டும் சரியானால் அவர் மீண்டும் பதவிக்கு வந்து விடலாம். இவ்வாறான சூழ்நிலைகள் ஏற்கனவே ரொனால்ட் ரீகன் ஜனாதிபதியாக இருந்தபோதும் மற்றும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஜனாதிபதியாக இருந்த போதும் ஏற்பட்டிருந்தது. துணை ஜனாதிபதியிடம் ஜனாதிபதி பொறுப்பை ஒப்படைக்கும் அளவுக்கு ஜனாதிபதியின் உடல் நிலை நல்லதாக இல்லை என்றால் அமெரிக்காவின் அமைச்சரவை மற்றும் துணை ஜனாதிபதி ஆகியோர், ஜனாதிபதி தனது பதவியை தொடரும் நிலையில் இல்லை என்று பிரகடனம் செய்து விட்டு துணை ஜனாதிபதி அந்த பதவியை ஏற்றுக்கொள்ள முடியும் என்று சட்டம் கூறுகிறது.

**ஜனாதிபதி ட்ரம்ப் இன் கொரோனா பரிசோதனை முடிவுகள் பொசிட்டிவ் (Positive) என வந்ததால் ஜனாதிபதி தேர்தல் தள்ளி வைக்கப்படுமா? அவரால் அப்போது ஜனாதிபதி பதவிக்கான வேலைகளைச் செய்ய முடியாமல் போனால் என்ன நடக்கும்? ட்ரம்ப் தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் ஏற்பட்டால் என்ன ஆகும்? போட்டியில் இருந்து ஒருவர் விலகி விட்டால் வாக்குச்சீட்டில் வேட்பாளர் பெயர் எப்படி மாற்றப்படும்? என்று பல கேள்விகள் எழுந்தன. இக் கேள்விகளுக்குப் பல்வேறு விதமான பதில்கள் பல இணையத் தளங்களில் வந்திருந்தன.**

ஒருவேளை ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி ஆகிய இருவருமே ஜனாதிபதி பொறுப்பை கவனிக்கும் உடல் நிலையில் இல்லை என்றால் பிரதிநிதிகள் சபையின் அவைத் தலைவர் அந்த பொறுப்புக்கு வரலாம் என அமெரிக்காவின் சட்டம் கூறுகிறது.

இச் சூழ்நிலை வந்தபோது ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நான்சி பெலோசி பிரதிநிதிகள் சபையின் தலைவராக இருந்தார். ஆனால் ஜனாதிபதி குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர்.

(தொடரும்...)

## வாகன விபத்துக்கள் மேலும் அதிகரிப்பு ஒரு வாரத்தில் 45 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த ஒரு வாரகாலப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட வாகன விபத்துக்களில் சிக்கி 45 பேர் பலியாகியுள்ளனர்.

இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த ஒரு வாரத்தில் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதன்படி, கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

கம்பஹா, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகப்படியான வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (நி-4)

## காதலர் தின ஒன்றுகூடல்களுக்கு தடை விதித்த பொலிஸார்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காதலர் தினத்தை ஒன்றுகூடி கொண்டாடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுபோன்ற பண்டிகைகளை சமூக ஊடகங்கள் மூலம் ஏற்பாடு செய்வது குறித்து தகவல் பெறப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுபோன்ற செயல்களுக்கு நட்சத்திர விடுதிகள் மற்றும் அரங்குகளை வழங்குவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## கஷ்டங்களை போக்கும் காயத்ரி மந்திரம்

(தொடர்ச்சி)

காயத்ரி தேவிக்கு 5 முகங்கள் உண்டு. பஞ்ச பூதங்களும் காயத்ரி தேவியில் அடக்கம் என்பதை இந்த உருவம் உணர்த்துகிறது.

காயத்ரி தேவி ரத்தின மாலை அணிந்து கமண்டலம், தாமரை, ஜெபமாலை ஆகியவற்றை ஏந்தி தாமரை ஆசனத்தில் வீற்றிருப்பாள். காயத்ரி மந்திரத்துக்கு சாவித்திரி என்றும் சரஸ்வதி என்றும் பெயர்கள் உண்டு.

எனவே இந்த மந்திரம் காலையில் காயத்ரிக்காகவும் மதியம் சாவித்திரிக்காகவும் மாலையில் சரஸ்வதிக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

காலையில் காயத்ரிதேவி குழந்தை வடிவமாகக் காட்சி அளிப்பாள். அப்போது அவள் ரிக் வேதம் உச்சரிப்பாள்.

மதியம் நடுத்தர வயது பெண் போல காயத்ரி காட்சி அளிப்பாள். அப்போது அவர் யஜுர் வேதத்தைச் சொல்வாள்.

மாலையில் காயத்ரி முதிர்ந்த பெண்ணாகத் தோன்றுவாள். அப்போது சாம வேதம் உச்சரிப்பாள். இதன்மூலம் காயத்ரி எல்லா மந்திரங்களுக்கும் தாய் போன்றவள் ஆகிறாள்.

ஆகையால் எப்போதும் காயத்ரி மந்திரத்தை உச்சரித்த பிறகே மற்ற மந்திரங்களைச் சொல்ல வேண்டும். காயத்ரி ஜெபம் செய்யாமல் வேறு எந்த மந்திரம் கூறினாலும் ஆராதனை செய்தாலும் அது பலன் தராது என்பார்கள்.

காயத்ரி மந்திரத்தை யார் ஒருவர் தினமும் விடாமல் சொல்லி வருகிறாரோ நிச்சயம் அவர் செல்வந்தர் ஆகி விடுவார் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. பலர் வாழ்வில் இது நடந்துள்ளது.

ஆனால் காயத்ரி மந்திரம் சொல்வதற்கு மனத்தூய்மையும் உடல் தூய்மையும் மிக மிக அவசியம். சுத்தமான இடத்தில் இருந்து தான் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

காயத்ரி மந்திரத்தை எப்போது சொல்லத் தொடங்கினாலும் 27 தடவை சொல்வது மிகவும் நல்லது. காயத்ரி மந்திரத்தை வெளியில் கேட்கும்படி உச்சரித்தால் 10 மடங்கே பலன் கிடைக்கும்.

உதடுகள் மட்டும் அசைந்தபடி கூறினால் 100 மடங்கு பலன் கிடைக்கும். ஆனால் உதடு கூட அசையாமல் மனதுக்குள் காயத்ரி மந்திரத்தைச் சொல்லி வந்தால் ஆயிரம் மடங்கு பலன் உண்டாகும்.

வீட்டில் இருந்து சொல்வதை விட ஆலயத்தில் ஒரு இடத்தில் அமர்ந்து காயத்ரி மந்திரத்தை உச்சரித்தால் அப்போது கிடைக்கும் பலன் அளவிட முடியாதது.

குறிப்பாக அம்மன் சந்நிதிகளில் கிழக்கு நோக்கி அமர்ந்தபடி அல்லது நின்றபடி காயத்ரி மந்திரத்தை ஜெபித்தால் அதனால் கிடைக்கும் பலன்கள் இந்த ஜென்மத்து தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதாக இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 - 6 மணி வரையிலான ராகு காலத்தில் காயத்ரி மந்திரத்தைக் கூறினால் நாம் எதிர்பார்க்கும் பலன்கள் வந்து சேரும்.

தினமும் காயத்ரி மந்திரம் சொல்லி வருபவர்களுக்கு "ஆத்மசுத்தி" கிடைக்கும். ஆலயத்தின் எந்தப் பகுதியில் நின்றும் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கலாம். ஆனால் மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு உலகளவில் 90 ஆவது இடத்தில் இலங்கை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 235 ஆக உயர்வடைந்துள்ளது.

நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில், கொரோனா பரவல் தொடர்பான சர்வதேச நாடுகளின் பட்டியலில் இலங்கை 90 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## மேலும் 290 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தொழில்வாய்ப்புக்காக ஜோர்தானுக்கு சென்று கொரோனா அச்சம் காரணமாக அங்கு பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளான 290 இலங்கையர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

ஜோர்தானின் அம்மானிலிருந்து நேற்று அதிகாலை 4.15 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டனர். (நி-4)

## தனிமைப்படுத்தப்பட்ட சில பகுதிகள் விடுவிப்பு

(மட்டக்களப்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த காத்தான்குடி நகரின் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வர்த்தக நிலையங்கள் நேற்றுக் காலை முதல் திறக்கப்பட்டிருந்தன. (நி-4)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 350 | 320 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 450 | 700 | 650 | 800 |
| தக்காளி | 200 | 150 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 160 | 220 | 230 | 240 |
| பூசணி | 120 | 130 | 130 | 160 |
| புடோல் | 180 | 200 | 200 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 500 | 450 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80-100 | 120 |
| பாகற்காய் | 180 | 160 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 140 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 50 | 150 | 160 |
| பீற்றூட் | 200 | 250 | 220 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 350 | 320 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 120 | 150 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | — | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 60 |
| தேசிக்காய் | 120 | 120 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 160 | 240 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 240 | 200 | 280 | 300 |
| முள்ளங்கி | 140 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 150 | 30 | 20 |
| ஈரப்பலா | 150 | 100 | — | 100 |



# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமையே பலம்



உடனே வேடன், ஐயையோ.... புறாக்கள் போனாலும் பரவாயில்லை நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே" என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான்.

பறந்து செல்லும்போதே, அதில் இருந்த மஞ்சள் புறாக்கள் கர்வத்தோடு, எங்களது வலிமையால் தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள்.

நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்க வில்லை என்றால்.... அவ்வளவுதான்" என்று கூறின.

உடனே ஊதா நிறப் புறாக்களும் தன் பங்குக்கு, "நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம்.

உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது" என்று கூறிக்கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்ததினால், அதன் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து. ஒரு மரக்கிளையில் வலை சிக்கிக் கொண்டது. இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஒற்றுமையே வலிமை என்ற பழமொழிக் கேற்ப இப்பு றாக்கள் தப்பிவிடுமோ என்று பயந்தான்.

நல்ல வேளையாக "ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி" என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே அவைகளை தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.


**நீதி :**

**எப்பொழுதும் ஒற்றுமையே சிறந்தது!**

(முற்றும்)

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### பிரமிக்க வைத்த போரஸ்




யானைகள் எதிரே வந்த வீரர்களை எல்லாம் துதிக்கையால் சுழற்றி அடித்தன. மாசிடோனியர்களின் ஈட்டிகள் யானைகளைப் பதம் பார்த்தன.

ஒருவருக்கொருவர் அத்தனை மூர்க்கத்துடன் மோதிக்கொண்டனர். போர் மிகப்பெரிய அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

திடீரென வானம் இருளத் தொடங்கியது. மழையும் பொழியத் தொடங்கியது.

ஓரளவு காய்ந்திருந்த களம் கால்களுக்கு விரோதமாக மாறத் தொடங்கியது.

தேர்ச்சக்கரங்கள் சேற்றில் சிக்கி மேலும் நகரமுடியாமல் திணறின. ஆனாலும் யானைப் படையின் உக்கிரம் கொஞ்சமும் குறையவில்லை.

எதைப்பற்றியும் கவலைப்படாமல் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

கொஞ்சம் விட்டால் அலெக்சாண்டரின் படை களைக் கபளீகரம் செய்துவிடும் அளவுக்கு அதீத வீரியத்துடன் செயற்பட்டது யானைப் படை.

பீதியூட்டும் பிளிறல் சத்தம், வீரர்களின் அபயக்குரல், மரண ஓலம் நெஞ்சை உலுக்க வைத்துக்கொண்டிருந்தன. கொஞ்சம் கொஞ்சமாக யுத்தக்களம் சவக்களமாக மாறிக்கொண்டிருந்தது.

ஏதாவது செய்ய வேண்டும். இல்லாவிட்டால் முதலுக்கே மோசம். புரிந்து விட்டது அலெக்சாண்டருக்கு.

உடனடியாகப் புருஷோத்தமரின் படைப் பலத்தைக் குறைக்க வேண்டும். தளபதிகளுக்கு அவசர அழைப்பு போனது.

வீரமிகு நண்பர்களே! போரில் உங்களுடைய செயற்பாடுகள் அதி அற்புதம். உங்களுடைய வீரத்திற்குத் தலைவணங்குகிறேன். என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். கேளுங்கள் அரசே! பதிலளிக்கக் காத்திருக்கிறோம்.

போரஸுடனான இந்த யுத்தத்தில் நாம் சமாளிப்பதற்கு மிகவும் கடுமையாக இருக்கும் விடயம் எது? யானைப் படைதான். சந்தேகமே இல்லை.

விருட்டென வந்து விழுந்தது பதில். நல்லது அந்த யானைப்படையை வீழ்த்த அல்லது சமாளிக்க ஒரு யோசனை சொல்கிறேன் அதன்படியே செய்யுங்கள். வெற்றி நிச்சயம்.

(தொடரும்)

மனிதனே! உன் மனதில் தோன்றும் எண்ணத்தை உடனே சொல்லிவிடு. இல்லையென்றால், சில நாட்கள் கழித்து, உனது கருத்தை நீ வேறு ஒருவன் வாயிலாக கைகட்டி நின்று கேட்க வேண்டிவரும். - எமர்ஸன்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உரிமைக்கான எழுச்சியோடு சமாந்தரமான எழுச்சிகளும் தேவை

நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட ஓர் இனம் எதிர் சக்திகளை முறியடித்து தனது இருப்பை நிலைநிறுத்த முற்படுமாயின், அதற்கான திட்டமிடல்களும் வகிபாகங்களும் அர்ப்பணிப்புகளும் நிறையவே தேவையாக இருக்கும்.

இந்த வகையில் இலங்கைத் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை என்பது தனித்து நில ஆக்கிரமிப்போடு மட்டும் நின்றுவிடவில்லை.

மாறாக கல்வி, பொருளாதாரம், கட்டுமானப்பணிகள், வேலைவாய்ப்பு, கலை கலாசாரம், ஒழுக்க விழுமியம் எனப் பல்வகைமை சார்ந்த ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் நடக்கின்றதெனும் உண்மை உணரப்பட வேண்டும்.

இவ்வாறான சூழமைவுக்குள் இருக்கக் கூடிய தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுகின்ற அதேவேளை; கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, விவசாயம், கடற்றொழில், கால்நடை, விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவியல், சுயதொழில் முயற்சிகள், கைத்தொழில், கலை பண்பாடு, ஒழுக்கவியல் எனப் பல்வேறு விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதாவது உரிமைக்கான எழுச்சிப் பேரணிகளும் அகிம்சைப் போராட்டங்களும் நடந்தேறுகின்ற அதேநேரம் அதற்குச் சமாந்தரமாக கல்வி, வேலைவாய்ப்பு தொழில் முயற்சி, ஒழுக்கவியல், பண்பாடு ஆகியவற்றிலும் எழுச்சியும் வளர்ச்சியும் ஏற்பட வேண்டும்.

மேற்குறித்த விடயத்தை உதாரணப்படுத்துவதாயின்;

எங்கள் இனத்தை வேரறுப்பதற்காக நயவஞ்சக் கூட்டமொன்று அதிதீவிர முயற்சியில் ஈடுபட்டு, எங்கள் இளைஞர்கள் மத்தியில் போதைப்பாவனையைப் பரப்புகின்றது.

இத்தகையவர்கள் எங்கள் அருமந்த இளைஞர்களைப் போதைக்கு அடிமையாக்கி எங்கள் இனத்தின் எதிர்காலத்தை மாளவைக்கின்ற சதி வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே இதனை முறியடிப்பதற்கான எழுச்சியும் எங்களிடம் சமநேரத்தில் ஏற்பட வேண்டும்.

இதுபோல எங்கள் மண்ணில் நடக்கின்ற தற்கொலை மரணங்கள், விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் என்பவற்றைத் தடுப்பதற்கும்

விவசாயம், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, சுயதொழில் முயற்சி போன்றவற்றினூடாக எங்களின் பொருளாதாரத்தை பலமாக்குவதிலும் நாம் கருசனை காட்ட வேண்டியது அவசியமாகிறது.

ஆக, எம் இனத்தின் உரிமைக்கான போராட்டம் நடக்கின்ற சமநேரத்தில் ஏனைய விடயங்களிலும் சமாந்தரமான எழுச்சி ஏற்படும்போது தான் எங்கள் இனம் வலிமை மிக்க இனமாக – உலக இயங்குநிலையில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய இனமாக நின்று நிலைக்க முடியும்.

இது விடயத்தில் துறைசார்ந்தவர்கள் தத்தம் பொறுப்புக்களை சிரமேற்கொண்டு செய்தால் எல்லாம் நன்மை தரும்.

# வடக்கும் கிழக்கும் ஒன்றிணைந்து புதிய அரசாங்கம் உருவாகும்

## அச்சத்தில் சரத் வீரசேகர

(கொழும்பு)

**வடக்கும் கிழக்கும் ஒன்றிணைந்து புதிய அரசொன்று உருவாகிவிடுமோ என்ற பீதி நாட்டுப்பற்றுள்ள மக்களின் உள்ளங்களை ஆட்டிப்படைத்துள்ளது. அதனால்தான் ஆரம்ப காலம் முதல் அவ்வாறானவர்கள் மாகாண சபைகளை வரவேற்கவில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

சிங்கள நாளேடொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

மாகாண சபைகள் தேவையில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். எனினும் நாட்டின் அரசியலமைப்பு அது தேவை என்கிறது.

மாகாண சபை முறையை நான் எதிர்க்கிறேன் என்பதை ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறேன்.

அதன்மூலம் நாட்டின் ஒற்றையாட்சிக்கு பலமான அடி விழுவதுடன் எமது நாட்டையும் ஒரு சமஷ்டி நாடாக மாற்றியமைக்க வேண்டியேற்படும்.

நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு எம்மில் பல இலட்சம் பேர் தமது உயிர்களை தியாகம் செய்துள்ளார்கள்.

அதன்படி இது ஒரே நாடு. இதில் ஒரே சட்டம் என்ற நிலை காணப்படுமாயின் ஒன்பது மாகாணங்களில் ஒன்பது வகையான சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது.

ஒற்றையாட்சியை விரும்பும் ஒரு அரசு என்ற வகையில் அது பற்றி சிந்திப்பது பிழை யல்ல.

புதிய அரசியலமைப்பொன்றை நாம் தயாரிக்கப்போகிறோம். அதன்படி குறைந்த அதிகாரங்களுடனான மாகாண சபைகள் இயங்குவதை நாட்டின் பொது மக்களும் விரும்புவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** தொண்டைமானாறு, கெருடாவிலில், மயிலியதனை, பொக்கணை, சிதம்பரா கல்லூரி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பாள் குளத்திலும்

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக்கொடிய கிராமம், பாவற்குளம் கிராமம், அவறந்துலாவ, மடுக்கந்தையிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச் சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, கூமாங்குளம் கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், சமணன்குளம் கிராமம், வீரபுரம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கொக்குப் படையானிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் கடற்படைமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மே மாதத்திற்குள் நிறைவடையும்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் மே மாதத்திற்குள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் நிறைவு செய்யும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத் துறை அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் பேசிய அவர்,

கொரோனா ஆபத்து இன்றி சுற்றுலாப் பயணிகள் பார்வையிடக் கூடிய பாதுகாப்பான நாடாக இலங்கை மாறும் என்றும் குறிப்பிட்டார். (நி-4)

## அபிராமிப்பட்டர் விழா


(யாழ்ப்பாணம்)

சுழிபுரம்-கம்பனை அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் விழா நாளை நடைபெறவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு ஸ்ஞபனாபிஷேகமும் விசேட பூஜையும் தொடர்ந்து எழுந்தருளி அம்பாளுக்கு விசேட பூஜையும் அதனைத் தொடர்ந்து தேவார பாராயணம் அபிராமி அந்தாதி ஓதுதல் நிகழும்.

இரவு 7.00 மணிக்கு மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட சப்பறத்தில் விசேட சாத்துப்படியுடன் K.N.இராமநாதன் புதல்வர்களினது மங்கல வாத்திய சகிதம் அம்பாள் திருவீதி உலா வந்து அருள் பாலிப்பார். (ம-3)

## திருவள்ளுவரின் ஆன்மீகச் சிந்தனைகள்



### கண்டிக்கும் உரிமையும் உண்டு

❖ தன்னிடம் உள்ள உணவு சிறிதாக இருந்தாலும், பிறருக்கு பகிர்ந்து கொடுத்து, தானும் உண்பதே அறங்களில் சிறந்த அறமாகும்.

❖ அறிவுரை சொல்லுதல் என்பது யாருக்கும் எளியது. ஆனால், தான் சொல்லியபடி வாழ்ந்து காட்டுதல் என்பது மிகவும் கடினமான செயலாகும்.

❖ ஒரு பொருட்டாக மதிக்கத்தகாதவரையும் மதிப்புமிக்கவராக மாற்றும் பெருமை செல்வத்திற்கு மட்டுமே உண்டு. பொருள் இல்லாத ஏழையை யாரும் மதிக்காத உலகம், செல்வந்தரைக் கண்டால் புகழ்கிறது.

❖நல்லவழியில் சம்பாதித்த செல்வம் அறச்செயல்களுக்கு பயன்படும். அதனால் உலகமே நல்லபயன்களைப் பெறும்.


❖ பயன் தரும் நல்ல நூல்களை படித்தால் இன்பம் பெருகும். அதுபோல, பண்புள்ள நல்ல மனிதர்களின் நட்பு மேலும் மேலும் இன்பத்தை உண்டாக்கும்.

❖ நட்பு கொள்வது வெறுமனே சிரித்து விளையாடுவதற்கு மட்டுமல்ல. ஒழுக்கநெறிகளில் இருந்து விட்டு விலகும்போது, கண்டித்து திருத்துவது தான் உண்மையான நட்பாகும்.

❖ அறிவில்லாதவர்களின் நட்பினை விட்டுவிலகிவிட வேண்டும். அதுவே, ஒருவன் வாழ்வில் பெறுகின்ற பெரும்பேறாகும்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
25
06
1955



இறப்பு
06
02
2021

# அமரர் சண்முகம் பாலசுந்தரம்

யாழ். அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாலசுந்தரம் கடந்த 06.02.2021 (சனிக்கிழமை) அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - சின்னமணி தம்பதிகளின் மூத்த மகனும் கிரிதாவின் அன்புக் கணவரும் லஜிதா(கனடா), பிரகாஸ்(பிரான்ஸ்), சிவகாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகாஸின் (லண்டன்) பாசமிகு சிறிய தந்தையும் சின்னம்மா, செல்லம்மா, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் நகுலராசா, தர்சினி ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, லங்கநாதன் மற்றும் தாமோதரம்பிள்ளை, பாலசுப்பிரமணியம், லச்சுமி அம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரதீபன், கலைமகள், காந்தரூபன், யாழினி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் கார்த்தீபன்(கனடா), கிரிஷாந்தி(பிரான்ஸ்), குகாஜினி, அனுசியா(லண்டன்), தாரணி, ராஜனா, நந்தமாலா, நந்தரஞ்சன், நந்தா, நந்தகாந்தன், அமுதா, பாமா, கண்ணதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிரன்(கனடா), றேஜிகன்(கனடா), துருவ்கரிகாலன்(லண்டன்), கீர்த்திக்கரிகாலன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2021) புதன்கிழமை காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை 'Hopital Tenom ' 4 Rue de la Chine - 75020 Paris எனும் முகவரியில் கிரியைகள் செய்யப்பட்டு பின்னர் அஞ்சலிக்காக 'CREMATORIUM DE SAINT - SOUPPLETS' 2 Rue du Pre de Vornat, 77165 Saint - Soupplets எனும் முகவரியில் அஞ்சலிக்காக 13.15 மணி முதல் 14.00 மணி வரை வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
நகுலராசா (சகலன்) - 0094776086237
விநாயகமூர்த்தி - 0033616164131
பிரகாஸ் (மகன்) - 0033751508955
சிவகாஸ் (மகன்) - 0094777361932
தேவகாஸ் (பெறாமகன்) - 00447860569230
கார்த்தீபன் (மருமகன்) - 0014168364438
ஞானதீபன் (மருமகன்) - 00447913980048

தகவல்:
குடும்பத்தினர்

(C-1399)

## வவுனியாவில்...

நிலையில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த மாணவி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கற்குழி பகுதியை சேர்ந்த சதுசியா (வயது - 16) என்ற மாணவியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

அவர் எழுதியதாக தெரிவிக்கப்படும் கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (ம-3,299)

## வடக்கில் 6 பேர்...

டுள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலை தரப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் என்பவற்றில் 765 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூவருக்கும் வவுனியா மாவட்டத்தில் மூவருக்கும் என வட மாகாணத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர தனிமைப்படுத்தல் நிலையங்களைச் சேர்ந்த எட்டுப் பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,316)

## கிணற்றிலிருந்து...

டுள்ளார்.

குறித்த சிறுவன் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் வீட்டில் இருந்து ரியூசன் செல்வதற்காக சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் அவர் அயல் வீட்டு கிணற்றில் சடலமாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

குறித்த சிறுவனின் புத்தகப் பை வீட்டிற்கு அண்மையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ப.அபிசேக் என்ற 7 வயது சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது தாயார் வெளிநாடொன்றில் வசித்துவரும் நிலையில் தந்தையார் மற்றும் அப்பம்மாவுடன் வசித்து வந்துள்ளார். சம்பவ தினம் தந்தையார் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,299)

## மோ.சைக்கிள்...

இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளியவளை - 1ஆம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த யோகலிங்கம் சிவரூபன் (வயது - 30) என்ற இளைஞனே உயிரிழந்தவர் ஆவார்.

கீச்சுக்குளம் - கூழாமுறிப்பு பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. (ம-3)

## கரவெட்டியில்...

துள்ளனர்.

கரவெட்டியில் காணியொன்றில் பின் பக்கமாக உள்ள வீடொன்றில் சில இளைஞர்கள் கஞ்சா பாவித்துக் கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த வீட்டினை பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இதில் சிலர் தப்பியோடியபோதும் 4 பேரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட 4 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. (ம-3,60)

## மக்கள் எழுச்சி...

ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கி பொலிகண்டி வரை மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிமன்றில் 3 பொலிஸ் நிலையங்களால் பி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் நேற்று திறந்த மன்றில் அழைக்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்ட நீதிமன்று, வழக்குகளை மார்ச் 29, மே 19 மற்றும் 20ஆம் திகதிகளுக்கு தவணையிட்டது. (ம-3,33)

## வடமராட்சிப்...

பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் கணவன், மனைவி, மகள் ஆகிய மூவர் படுகாயங்களுக்கு உட்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 7.30 மணியளவில் வல்லிபுரம், புலோலி பகுதியில் இரு பகுதியினருக்கு இடையில் முன்பகை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் சிவலிங்கம் லோகேஸ்வரன் (வயது - 39), அவரது மனைவியான லோகேஸ்வரன் கௌசல்யா (வயது - 36), அவரின் மகளான லோகேஸ்வரன் அபிராமி ஆகிய மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (ம-3,60)

## 5 பேர்...

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 370ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## இலங்கை விவ...

கட்டமைப்பை மீறும் செயலாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வரையறைகளிற்குள் எதிர்வரும் 22ஆம் திகதி பொறுப்புக்கூறல் சார்ந்த யோசனைக்கான் பதிலை அரசாங்கம் ஜெனிவாவில் அளிக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நா மனித உரிமைகள் பேரவை மீது கடும் விமர்சனத்தை முன்வைத்தார். (ம-3)

## கொழும்பு...

இந்தப் போராட்டம் குறித்து தமிழ் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளைப் பார்த்தேன். ஆனால் கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடகங்கள் இது குறித்து கவனம் செலுத்தவில்லை.

அமைதி வழிப் போராட்டம் என்பது அடிப்படை ஜனநாயக உரிமைகளில் ஒன்றாகும்.

இவ்வாறான அமைதி வழிப் போராட்டங்களுக்கு செவிசாய்க்க வேண்டும். அவர்களின் கவலைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் எனவும் தனது ருவிட்டரில் நேற்று அவர் பதிவிட்டுள்ளார். (ம-3)

## இளைஞர்களை...

தான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தெற்கில் உள்ள 15 சிங்கள பாதாள குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 30 பேரை தடுப்பில் வைக்கும் வரை இவை தொடர்பாக தான் எதனையும் அறிந்திருக்கவில்லை என்றும் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டார்.

எனவே பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக தனக்கு தெரிவிக்காது அல்லது முறைப்படியாக போது அரசாங்கம் அநேகமானோரை தடுப்பில் வைக்குமானால் தற்போது அந்த பாதுகாப்பினை மீளப்பெறுவது ஏன் என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

ஒருவேளை அப்பாவி இளைஞர்களை தடுப்பில் வைத்திருப்பதாக தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என அரசாங்கம் தெரிவித்திருக்கலாம் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

தற்போது பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ள நிலையில் யாதாயினும் பாதகம் ஏற்படுமாயின் அரசாங்கமே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## 975 பேருக்கு...

மாதம் முதல் நேற்று வரை 71 ஆயிரத்து 211 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## ஐ.நாவில்...

விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் கனடா தலைமைத்துவம் வழங்குவது மீண்டும் தேவையாக உள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கனடாவுக்கான இயக்குநர் பரீடா டெய்வ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போருக்குப் பின்னர் நல்லிணக்கத்தையும் நீதியையும் ஏற்படுத்துவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முக்கிய பங்களிப்பு செய்த நாடுகளில் ஒன்றாகக் கனடா காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மீண்டும் மோசமடைகின்றது எனவும், இராஜதந்திர நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துவது குறித்து கனடா கவனம் செலுத்துவது முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2021.02.09
சீட்டிழுப்பு இலக்கம் - 430
X 18 21 36 49
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 09.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2688
Q 18 27 36 50

மஹஜன சம்பத
திகதி 2021/02/09
சீட்டிழுப்பு இலக்கம் 4393
L 5 0 7 0 6 7

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/02/09
சீட்டிழுப்பு இலக்கம் 1573
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 10 21 36 55

மெகா பவர்
திகதி 09/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0760
A 21 22 31 50 58

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1189
சீட்டிழுப்பு திகதி: 09.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 106,533,215
10 25 30 64 L

சனிதா
சீட்டிழுப்பு இல: 3519
சீட்டிழுப்பு திகதி: 09.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,877,298
03 30 34 48 V

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,994,815/=
திகதி: 09.02.2021
வெற்றி வாரம்: 3070
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 31 38 44 47
மிதுனம்
ரூ. 10,943,340

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1363
சீட்டிழுப்பு திகதி 09/02/2021
நிறம் இள நீலம்
தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
I 03 05 10 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் 67,873,677/=

சீட்டிழுப்பு வாரம் 688
09.02.2021 செவ்வாய்
P 38 50 52 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,208,420
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலை வாய்ப்பு

தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை.

தகைமை - O/L, A/L

(5597)

**077 572 9724**

அன்னா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500

(C-1357)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org

(5444)

**021 222 8093** புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.


## பாம்புக் கடிக்கு இலக்காகிய இளைஞன் வைத்தியசாலையில்

(அராலி)

உடுவிலில் பாம்பு கடிக்கு இலக்காகிய இளைஞன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இருட்டில் வெளிச்சம் இல்லாமல் வீட்டுக்கு வெளியே சென்றதாலேயே பாம்பு தீண்டியதாக உறவினர்கள் கூறுகின்றனர்.

இதில் மாசியப்பிட்டி-கொம்பனிப் புலம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் லக்ஸன் (வயது-19) என்பவரே இவ்வாறு பாம்பு கடிக்கு இலக்காகியுள்ளார்.

(ம-03,104)


## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக் கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1374)

0768226240 DHL



## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ காப்புறுதி ஆலோசகர்கள்
◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி

(5590)

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**காப்புறுதி ஆலோசகர்கள்**
- ◎ க.பொ.த சாதாரண தரம் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- ◎ வயதெல்லை 18இற்கு மேல்



நேர்முகத் தேர்வு : 11.02.2021 நேரம் : 10 - 12 a.m

இடம் : 218, 3ஆம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு : 077 368 8791 Email : rayman2017r@gmail.com

UNION ASSURANCE A JOHN KEELLS COMPANY



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532





## அறிவித்தல்

அன்பார்ந்த தமிழ் பேசும் உறவுகளே! சிறுபான்மையினர் ஆகிய நாம் பெரும்பான்மையினரால் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தொடர்ந்து இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டு வருகின்றோம்.

இன்று உள்ள நாட்டுச் சூழலில் சிறுபான்மையினர் ஆகிய நாம் அனாதைகளாக்கப்பட்டுள்ளோம். நாம் மேலும் எமது எதிர்கால சந்ததியை அடிமைகளாக்க விடமுடியாது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஓர் சிறந்த தலைவரோ கட்சியோ இல்லாமையை நன்கு உணர்ந்துள்ளோம். இதனைக் கருத்தில் கொண்டு வடக்கு - கிழக்கில் எல்லோரையும் உள்வாங்கி ஓர் சமத்துவமான கட்சியை உருவாக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

எனவே இன, மத, மொழி, பால் பாகுபாடின்றி ஓர் கட்சியை உருவாக்குவோம். இதனை யாப்பின் மூலம் உறுதிப்படுத்துவோம்.

**இக்கட்சியில்....**
- ⋆ கல்வியியலாளர்கள்.
- ⋆ நாட்டுப்பற்றாளர்கள்.
- ⋆ பிற கட்சிகளில் மாற்றுக் கருத்து உள்ளவர்கள்.
- ⋆ நாட்டுப்பற்றுமிக்க துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை.

சின்னம்




# இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சி

கட்சியின் பெயர் **CEYLON PEOPLE RISEN PARTY (C.P.R.P)**

தகவல் :

Lion அருள். ஜெயந்திரன்

(உரிமையாளர் : சண்ஜெயா உணவகம், யாழ்., வைத்திய கலாநிதி R. அருள்பிரகாசம் (தந்தை) முன்னாள் சுகாதார சேவைகள் அதிபத்தியட்சகர் - வடமாகாணம்)

ச.வே. சண்முகம்பிள்ளை (பேரன்).
(முன்னாள் பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு, முன்னாள் வடமாகாண சபை வேட்பாளர்.)

முக்கிய குறிப்பு :

கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் வடக்கு - கிழக்கில் பின்வரும் திகதிகளில் கூட்டம் கூட்டப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

திகதி :
வடக்கில் : 21.02.2021 (4.00 p.m)
கிழக்கில் : 07.03.2021 (4.00 p.m)

(5600)

021 222 3460, 021 222 3480
077 747 4111

கூட்டம் இடம்பெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 32, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

" எல்லோரும் சேர்ந்து சுபீட்சமான நாட்டை உருவாக்குவோம். "


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.